வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria நியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 16.07.2024 செவ்வாய்க்கிழமை | இதழ் : 198 | பக்கங்கள் : 12

# 13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறை!

## மன்னாரில் செல்வம் எம். பியுடனான சந்திப்பின் பின்னர் சஜித் தெரிவிப்பு

- மாகாண சபைகளை வலுப்படுத்துவேன்
- கடல் வள கொள்ளைக்கு நிரந்தர தீர்வு
- காணாமலாக்கப்பட்டோர் பிரச்னைக்கு தீர்வு

மன்னார், ஜூலை 16

**நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன். எமது கடல் வளங்கள் கொள்ளை போவதைத் தடுக்கும் வகையில் நிரந்தரத் தீர்வை பெற்றுக்கொடுப்பேன் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று மன்னாரில் தெரிவித்தார்.**



பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மன்னார் மாவட்டத்துக்கு நேற்று வருகை தந்தார்.

இதன்போது, தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பணிமனைக்கு சென்ற அவர் அந்தக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனை சந்தித்து உரையாடினார்.

இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர், மன்னாரின் அபிவிருத்திக்காக மீண்டும் இங்கு வருகை தந்துள்ளேன். வடக்கு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு

11



## கொக்குத்தொடுவாய் புதைகுழி; அகழ்வு பணி நிறைவடைந்தது!

### 52 மனித எலும்புக்கூடுகள் மீட்பு நீதிமன்ற நடவடிக்கை தொடரும்

முல்லைத்தீவு, ஜூலை 12

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகள் நேற்றுடன் முடிவுக்கு வந்தன. அங்கு, கண்டறியப்பட்ட அனைத்து (52) மனித எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டமையை அடுத்து இந்தப் பணி நிறைவடைந்தாகவும் இது தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

11


## தேர்தலை ஒத்திவைக்கக் கோரி தாக்கல் செய்த மனு தள்ளுபடி!

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்குமாறு தீர்ப்பு வழங்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை நேற்று உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

"அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் உரிய வகையில் நிறைவேற்றப்படவில்லை.

11



## பரந்தன் இரசாயன தொழிற்சாலை காணியை பார்வையிட்ட அமுனுகம

கிளிநொச்சி, ஜூலை 16

அபிவிருத்தி செய்யும் நோக்கில் பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கு சொந்தமான காணியை வடக்குக்கு நேற்று வருகை தந்த முதலீட்டு மேம்பாடு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம பார்வையிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள 4 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக வருகை தந்திருந்த அவர்

11

## 22.5 வீதம் குறைகிறது மின்சார கட்டணம்!

### இன்று முதல் நடைமுறையாகும்

கொழும்பு, ஜூலை 16

வீட்டுப் பாவனைக்கான மின்சார கட்டணத்தை 22.5 வீதத்தால் குறைப்பதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதித்ததாக அதன் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புதிய மின்சார கட்டண திருத்தத்தை இன்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைப்படுத்துமாறு இலங்கை மின்சார சபைக்குபொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

11

## நாட்டின் எதிர்காலத்துக்காக ரணில் அரசு அமையவேண்டும்!

### திஸநாயக்க சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 16

2022ஆம் ஆண்டு பயங்கரவாதிகளை அடக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியார் வியாபாரிகளை கண்டு அச்சமடைய மாட்டார். நாட்டின் எதிர்காலத்துக்காகவேனும் ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று ஆளும் தரப்பின் பாராளுமன்ற

11

## பணிப்புறக்கணிப்பு செய்யாத ஊழியர்களுக்கு கொடுப்பனவு

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 16

சுகயீன விடுமுறை போராட்டத்தில் பங்கேற்காத நிறைவேற்று தரம் அல்லாத அனைத்து அரசாங்க ஊழியர்களுக்கும் விசேட கொடுப்பனவு வழங்க அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, போராட்டத்தில் பங்கேற்காமல் பணிக்கு சமுகமளித்த சகல அரச

11

## சம்பிரதாய அரசியலைவிட்டு நாட்டுக்காக சிந்திப்போம்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 16

சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி நாட்டைப் பற்றி சிந்திக்கும் அரசியல் கலாசாரம் நாட்டின் முன்னேற்றத்துக்கு அவசியமானது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என அனைத்து அரசியல் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள பொறுப்பை குறைத்து மதிப்பிட முடியாது. நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டத்துக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

11

## யாழ்ப்பாணத்தின் தமிழ் தமிழ்நாட்டில் இல்லையே!

### இந்திய உயர்நீதிமன்ற நீதியரசர்



யாழ்ப்பாணம், ஜூலை 16

தமிழ்நாட்டில் இவ்வாறான தமிழ் இல்லையே என்று யோசிக்க வைக்கும் அளவுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தழைத்திருக்கின்றன என்று கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதியரசர் சிவஞானம் தெரிவித்தார்.

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறுகின்ற வேளைகளில் எல்லாம் அந்தத் தேர்தலில் தாம் விரும்பியவர்களை வெற்றி பெறவைக்க சில வெளிநாடுகள் முயற்சி செய்வதாகக் கூறப்படுவதுண்டு.

கடந்த பதினைந்தாம் ஆண்டு தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிப்பதற்காக பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை களம் இறக்குவதற்கு சில வெளிநாடுகள் பின்னணியில் இருந்தன என்றும் அப்போது கூறப்பட்டது.

அதிகம் ஏன், தான் தோல்வியடைந்ததன் பின்னணியில் இந்திய உளவு அமைப்பான 'றோ' இருந்ததாக மகிந்த ராஜபக்ஷ நேரடியாகவே குற்றச்சாட்டை சுமத்தியும் இருந்தார்.

நடைபெறவிருக்கும் தேர்தலிலும் தமக்கு விருப்பமானவர்கள் வெற்றி பெறுவதை விட தமக்கு விருப்பமில்லாதவர்கள் வெற்றி பெற்றுவிடக் கூடாது என்பதில் சில நாடுகள் கவனமாக இருக்கின்றன என்று கூறப்பட்டது. அதனால்தான் மும்முனைப் போட்டியைத் தவிர்த்து அதனை இரு முனைப் போட்டியாக மாற்றுவதற்கு அதீத பிரயத்தனம் செய்யப்பட்டது. இந்த முயற்சி இன்னமும் முழுமையாக கைவிடப்படவில்லை. என்றாலும், இரு தரப்பும் இறங்கிவர சம்மதிக்காததால், வேறுவழியின்றி அந்த முயற்சியில் இப்போது அதிக அக்கறை காட்டப்படவில்லை என்றாலும் முயற்சி முழுமையாகக் கைவிடப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்த முயற்சி முழுமையாகக் கைவிடப்படுமானால் நமது பக்கத்து நாடும் மேற்குலக நாடுகளும் யார் வெற்றி பெறுவதை விரும்பும் என்பதே இப்போது மில்லியன் டொலர் கேள்வியாக பேசப்படுகின்றது.

யார், யாரை விரும்பினாலும் ஜனாதிபதியைத் தெரிவு செய்யப்போவது இந்த நாட்டின் மக்கள் மட்டுமே. வெளி சக்திகள் வேண்டுமானால் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னர் வேட்பாளர்களை ஒன்றிணைக்கலாம் அல்லது தமக்கு விருப்பமானவர்களை நோக்கி சில எதிரணி எம். பிக்கள் - தலைவர்களை அணி மாற வைக்கலாம். இதுபோன்றவை வெளியே தெரியாமல் காதும்காதும் வைத்ததுபோல செய்யக்கூடியவை. அந்த வெளி சக்திகள் இதுபோன்ற விடயங்களில் தலையை நுழைக்கலாமே தவிர, நேரடியாக மக்கள் மத்தியில் பிரசாரத்தில் ஈடுபடப்போவதில்லை - ஈடுபடவும் முடியாது.

இனி இன்றைய விடயத்துக்கு வருவோம்.

அண்மையில், இந்தியத் தூதுவர் நமது ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணித் தலைவர்களையும் அதன் எம். பிக்களையும் சந்தித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அந்தச் சந்திப்பின்போது, தமிழ் பொதுவேட்பாளர் விடயம் தொடர்பாக கவனம் செலுத்திய இந்தியத் தூதுவர், அவர்களுக்கு சில ஆலோசனைகளையும் வழங்கியிருந்தமை செய்திகளில் வெளிவந்தவைதான்.

யுத்தம் நிறைவடைந்த பின்னரான மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் ராஜபக்ஷக்களை தோற்கடிப்பதற்காகவே அவர்களுக்கு எதிரான வேட்பாளர்களை ஆதரித்தீர்கள். ஆனால், இந்தத் தடவை அப்படியான நிலைமை இல்லை. எனவே, இரண்டு வேட்பாளர்களுடன் பேசி உங்கள் கோரிக்கையை முன்வைத்து அவர்களை ஆதரிக்க இது நல்ல சந்தர்ப்பம் என்று தூதுவர் யோசனை சொன்னபோதும், "எங்கள் வாக்குகளில் வெற்றி பெற்ற மைத்திரி எப்படி நடந்துகொண்டார் என்பதைப் பார்த்தோம். இனியும் அப்படி அவர்களுடன் பேசுவதெனில் உங்களைப் போன்ற ஒருவரின் மத்தியஸ்தத்தின் கீழ்தான் பேசலாமே தவிர, நாங்கள் பேசுவது பழைய கதைகள் போலவே முடியும்" என்று இவர்கள் அவருக்கு புரியவைத்திருக்கின்றனர்.

தான் ஓர் அரசியல்வாதி அல்லர் என்றும் தனக்கு அது போன்ற விடயங்களில் சம்பந்தப்பட முடியாது என்பதை பக்குவமாக எடுத்துச் சொன்ன தூதுவர், அண்மையில் தான் சஜித் பிரேமதாஸவை சந்தித்திருந்ததார் என்றும் அவர் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தத் தான் விரும்புகிறார் எனவும் சொன்னார் எனவும் கூறியிருக்கிறார்.

இதன் மூலம் அவர் மறைமுகமாக சொன்ன செய்தி, சஜித்துடன் பேசி ஓர் இணக்கப்பாட்டுக்கு வரலாமே என்பதாகவும் இருக்கலாம்.

இந்தத் தமிழ் பொதுவேட்பாளர் விடயம் பற்றி பேசுகின்ற போது அண்மையில் தமிழ் அரசின் தலைவர் மாவை சேனாதிராசா டான் ரீ. விக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் அதற்கு தனது முழு ஆதரவையும் தெரிவித்திருந்தார். தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்றும் அவர் சொல்லியிருந்தார். அவர் அவ்வாறு சொல்லியிருந்தமையை நமது அப்புக்குட்டியர், "தமிழ் மக்கள் ஒன்றுபடுவதற்கு முதல், உங்கள் கட்சிக்காரரர் (தமிழ் அரசு) ஒன்றுபடவெல்லோ வேணும்" என்று கேட்டிருந்ததைப் படித்துவிட்டு நியூசிலாந்தில் இருக்கும் ஒரு மூத்த ஊடகவியலாளர் குறுந்தகவல் அனுப்பினார்.

"இனி மாவையும் இந்த கிறேசி பீப்பிள் (தமிழில் சொல்வதானால் முட்டாள் பயல்கள்) வரிசையில் வந்துவிட்டாரே. தங்கள் கட்சி தலைவர் ஒருவரையே முட்டாள் என்று அரசியல்வாதி ஒருவர் சொன்ன சம்பவம் அரசியல் வரலாற்றில் அதுவும் நம் மத்தியில்தான் நடந்திருக்கிறது என்று பெருமைப்படுவோம்"!

அதுவே அந்த ஊடகர் அனுப்பிய செய்தி. அவர் தெரிவித்திருந்ததும் சரியானதுதான்.!

**- ஊர்க்குருவி**

# சாவகச்சேரி மருத்துவமனை பணிகள் வழமைபோல் சுமுகமாக நடக்கின்றன

## பதில் மருத்துவ அத்தியட்சகர் ரஜீவ்

தென்மராட்சி, ஜூலை 16

"சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பணிகள் வழமைபோல் சுமுகமாக நடைபெறுகின்றன. எந்த விதமான பிரச்னைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளை பெற்று வருகின்றார்கள்." - இவ்வாறு சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் புதிய பதில் அத்தியட்சகர் மருத்துவர் கோ. ரஜீவ் தெரிவித்தார்.

மருத்துவமனைக்கு முன்னைய பதில் பணிப்பாளர் இ. அர்ச்சுனா சென்றமையை தொடர்ந்து நேற்று அங்கு சர்ச்சை ஏற்பட்டது. இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைத்த பதில் பணிப்பாளர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"மருத்துவர் அர்ச்சுனா நேற்று காலை பணிமனைக்கு வருகை தந்து தன்னுடைய காலப் பகுதியில் ஏற்கனவே இருந்த அரச கடிதங்களை பார்வையிட்டு கையொப்பத்தைப் பதிவிட்டிருந்தார்.

மத்திய அரசால் வழங்கப்பட்ட கடிதத்தின் உண்மைத்தன்மை தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும், தான் மத்திய அமைச்சுக்கு நேரடியாக சென்று கேட்டபோது தனக்கு அந்தக் கடிதம் வழங்கப்படவில்லை எனவும் மருத்துவர் அர்ச்சுனா தெரிவித்தார்.

நான் அந்தக் கடிதத்தின் பிரதியை அவருக்கு வழங்கினேன். அவர் அதனைப் பார்வையிட்டபோதும் எடுத்துச் செல்லவில்லை. அதன் பின் தொடர்ச்சியாக என்னை கடமையாற்றுமாறு கூறிவிட்டு மருத்துவ அத்தியட்சகர் பணிமனையிலிருந்து மருத்துவர் அர்ச்சுனா வெளியேறினார்.

மருத்துவமனை பணிகள் வழமைபோல் சுமுகமாக நடைபெற்று வருகின்றன. எந்தவிதமான பிரச்னைகளும் இல்லாமல் நோயாளிகள் தமக்கான சிகிச்சைகளை பெற்று வருகின்றார்கள். அதேபோல் மருத்துவர்களும், ஏனைய உத்தியோகத்தர்களும் தமது கடமையில் ஈடுபட்டு வருகின்றார்கள். நாங்கள் தொடர்ச்சியாக மருத்துவமனையின் அபிவிருத்தி பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடி வருகின்றோம்." - என்றார். (ஐ)

# புதுமண தம்பதி உட்பட ஐவர் விபத்தில் காயம்!

கொழும்பு, ஜூலை 16

புதுமண தம்பதியர் பயணித்த கார் மற்றொரு கார் மற்றும் மோட்டார் சைக்கிளுடன் மோதிய விபத்தில் 5 பேர் காயமடைந்தனர்.

இதில், புதுமண தம்பதியர், இரு கார்களின் சாரதிகள், மோட்டார் சைக்கிள் செலுத்துநர் என ஐவரே காயமடைந்தனர்.

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சாவகச்சேரியில் 3 பேர் கைது!

தென்மராட்சி, ஜூலை 16

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் எச்சரிக்கையை மீறி காணொலி எடுக்க முயன்ற மூவர் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பதில் அத்தியட்சகராக இருந்த இ. அர்ச்சுனா நேற்று திங்கட்கிழமை அங்கு சென்றிருந்தார்

இந்த நிலையில், அங்கு ஆர்ப்பாட்டம் இடம்பெறலாம் என்று முன்னெச்சரிக்கையாக பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி காணொலி எடுக்க முயன்ற மூவர் கைது செய்யப்பட்டனர். (ஐ)

# வடக்கு மக்கள் ஏற்கக்கூடிய தீர்வை அநுர தரப்பு முன்வைக்க வேண்டும்

## புத்திஜீவிகள் குழு அறிக்கை

கொழும்பு, ஜூலை 16

அனைத்து இனத்தவர்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை இனப்பிரச்னைக்கு தேசிய மக்கள் சக்தி முன்வைக்க வேண்டும். அது, வடக்கின் பெரும்பான்மை மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய - நடைமுறை சாத்தியமான தீர்வாகக் காணப்பட வேண்டும் - என்று நாட்டின் புத்திஜீவிகள் - கல்விமான்கள் அடங்கிய குழு ஒன்று கூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தக் குழு வெளியிட்ட அறிக்கையில்,

1947ஆம் ஆண்டு முதலாவது தேசிய தேர்தலின் போது நாங்கள் பொன்னான வாய்ப்பை தவறவிட்டோம். ஆகவே எதிர்வரும் தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் அதன் பின்னர் இலங்கை சமூகத்தில் கடும் கருத்து வேறுபாட்டை தொடர்ந்தும் உருவாக்கி வரும் இனப்பிரச்னை உட்பட தேசிய பிரச்னைகளுக்கு தீர்வை காண்பதற்கும் தேசிய மக்கள் சக்தி முன்னுரிமை வழங்க வேண்டும்.

இனவெறி - ஏதேச்சதிகாரம் - நவதாரளவாதம் ஆகியவற்றுக்கு எதிரான முற்போக்கு மற்றும் அனைத்து இடதுசாரி சக்திகளையும் ஐக்கியப்படுத்துவதன் மூலம் மக்களை ஐக்கியப்படுத்தி இனப்பிரச்னைக்கு தீர்வை காண்பதற்காக அனைத்து இனக்குழுக்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை தேசிய மக்கள் சக்தி முன்வைக்கவேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# மொரட்டுவை வீடு ஒன்றில் தாக்கப்பட்டு ஒருவர் பலி!

கொழும்பு, ஜூலை 16

மொரட்டுவை, லக்ஷபதிய ரத்துகுருஸ்ஸ வத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை கூரிய ஆயுதத்தால் தாக் கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

"பொடி அய்யா" என அழைக்கப்படும் ஹரேந்து குமார என்ற 41 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலைச் சம்ப வம் தொடர்பில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கொலைச் சம்பவத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் பிரதேவாசிகளுக்கு இந்த வீட்டில் நபரொருவர் கூச்சலிடும் சத்தம் கேட்டுள்ளது.

பின்னர், சிறிது நேரம் கழித்துக் கொலை செய்யப்பட்டவரது மனைவி தனது கை,கால்களில் கட்டப்பட்டுள்ள கயிறுகளை கழற்றிவிட்டு அயல் வீட்டில் வசிக்கும் பெண் ஒருவருக்கு தொலைபேசி ஊடாக அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த தொலைபேசி அழைப்பை பெற்றுக் கொண்ட அயல் வீட்டில் வசிக்கும் பெண் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளார்.

இதனையடுத்து, கொலை செய்யப்பட்டவரது மனைவி பிரதேசவாசிகளின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரட்டுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
16.07.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆனி 32

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## சஜித்தின் 13 மந்திரம்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தொடர்பில் தொடர்ந்தும் உச்சரித்து வருகின்றார். பிரதான வேட்பாளர்கள் அனைவருமே அவ்வாறுதான் கூறுகின்றனர். ரணில் விக்கிரமசிங்க மட்டும் பொலிஸ் அதிகாரம் தவிர்ந்த பதின்மூன்று தொடர்பில் பேசிவருகின்றார். ஆனால், இதிலுள்ள அடிப்படையான விடயம் சஜித் பிரேமதாஸவும் அது பற்றித்தான் பேசுகின்றார். ஆனால், அவர் வெளிப்படையாகக் கூறாமல் பதின்மூன்று என்று பொதுவாகப் பேசி வருகின்றார்.

தமிழ் கட்சிகளின் தலைவர்களை சந்திக்கும்போதும் இதனை வலியுறுத்தி வருகின்றார். ஆனால், சஜித் பிரேமதாஸ பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் என்று எங்குமே குறிப்பிடவில்லை. தமிழ் கட்சிகளின் தலைவர்களும் அதனை அவரிடம் கோரவில்லை. பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் அரசமைப்பில் இருக்கும் ஒன்று - அது தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வல்ல என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் எண்ணினால் அவர்கள் தாங்கள் எதிப்பார்க்கும் விடயங்களை பிரதான வேட்பாளர்களிடம் தெளிவாக வலியுறுத்த வேண்டும்.

தங்கள் கோரிக்கைகள் உள்ளடங்கிய வெளிப்படையான உடன்பாட்டை கோர வேண்டும். அதற்கு பிரதான கட்சிகள் இணாங்கவில்லையாயின், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை உறுதியாக முன்னெடுக்க ஒன்றுபட வேண்டும். ஆனால், தமிழ் கட்சிகளின் அணுகுமுறைகள் 'மதில் மேல் பூனை' யாகவே இருக்கின்றன. இது அடிப்படையிலேயே தவறானது. ஒன்றில் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை முன்கொண்டுசெல்ல உழைக்க வேண்டும் அல்லது தென்னிலங்கை வேட்பாளர்களில் ஒருவரோடு தெளிவான உடன்பாட்டுக்கு செல்ல வேண்டும். இந்த அடிப்படையில் நோக்கினால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு தொடர்பில் - சுமந்திரனின் நிலைப்பாடு மட்டுமே தெளிவானது. அதாவது, தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை சுமந்திரன் வன்மையாக எதிர்க்கின்றார்.

பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை சஜித் பிரேமதாஸ நிச்சயமாக அமுல்படுத்தப் போவதில்லை. தென்னிலங்கை சக்திகள் அனைத்தையும் கடந்து செல்லக்கூடிய துணிவுள்ள தலைமைத்துவம் சஜித் பிரேமதாஸவிடம் இல்லை. கடும்போக்குவாதிகள் எதிர்த்தால் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்திலுள்ள காணி அதிகாரத்தைக்கூட சஜித் அமுல்படுத்துவதை கைவிட்டுவிடுவார். அரசியல் அனுபவமுள்ளவர்கள் என்று தங்களை கருதிக்கொள்ளும், தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு இந்த அடிப்படை உண்மை விளங்கவில்லையா?

ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலின்போதும் சில மந்திரங்களை தென்னிலங்கை வேட்பாளர்கள் உச்சரிப்பதுண்டு. யுத்தத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ஷ பதின்மூன்று பிளஸ் என்னும் மந்திரத்தை உச்சரித்துக் கொண்டிருந்தார். "நல்லாட்சி" என்று சொல்லப்பட்ட காலத்தில் 'புதிய அரசியல் யாப்பு' என்னும் மந்திரம் உச்சரிக்கப்பட்டது. கூட்டமைப்பும் அதனை உச்சரித்து பூரிப்படைந்தது. இன்றைய சூழலில், ஒரு நெருக்கடியான தேர்தலை எதிர்கொள்ளவுள்ள தென்னிலங்கை வேட்பாளர்கள் அனைவருமே பாரபட்சமில்லாமல் தற்போது '13' மந்திரத்தை உச்சரித்துவருகின்றனர். இதனை நம்பி தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் - மீண்டும் ஒருமுறை ஏமாந்து போகவேண்டும் என்பதுதான் தமிழ் கட்சிகளின் விருப்பமா? தமிழ்த் தேசிய அடிப்படையில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் கட்சியினர் கடந்த பதினைந்து வருட கால அரசியல் அனுபவங்களிலிருந்து பாடம் எதனையும் கற்றுக்கொள்ளமாட்டார்களா?

# கடல் அட்டை பண்ணையை அகற்றுமாறு கோரி மகஜர்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

கடல் அட்டை பண்ணையால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. எனவே, அதனை அகற்ற வேண்டும் என்று கோரி ஊர்காவற்றுறை மீனவர்கள் பிரதேச செயலருக்கு நேற்று திங்கட்கிழமை மனு ஒன்றை அளித்தனர்.

வேலணை அம்பிகை நகர் கடற்றொழிலாளர் சங்கம், மெலிஞ்சிமுனை கடற்றொழிலாளர் சங்கம், தம்பாட்டி கடற்றொழிலாளர் சங்கம், சின்னமடு கடற்றொழிலாளர் சங்கங்களை சேர்ந்த மீனவர்களே இந்த மனுவை கையளித்தனர்.

"மெலிஞ்சிமுனையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் கடல் அட்டை பண்ணைகளால் சிறியளவில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் எமது தொழில் பாதிக்கப்படுகிறது. எனவே, இந்த கடல் அட்டை பண்ணைகளை அகற்ற வேண்டும்", என்று அந்த மனுவில் மீனவர்கள் கோரியுள்ளனர்.

(ஐ)

# கட்சி தவிசாளர் பதவியிலிருந்து யாராலும் என்னை நீக்கமுடியாது!

## சரத் பொன்சேகா எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 16

"மற்றவர்களின் விருப்பத்துக்கு ஏற்ப ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து மற்றும் களனி ஆசன அமைப்பாளர் பதவியிலிருந்து என்னை யாராலும் நீக்க முடியாது", என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கட்சிப் பதவிகளிலிருந்து என்னை நீக்குவதற்கு எதிராக நீதிமன்ற தடை உத்தரவை பெற்றுள்ளேன் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து சரத் பொன்சேகா நீக்கப்பட்டார் என்று வெளிவரும் செய்திகள் தொடர்பில் அவர் தென்னிலங்கையின் ஊடகம் ஒன்றுக்கு அளித்த நேர்காணலிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த நேர்காணலில், "நாங்கள் நீதிமன்றத்துக்கு சென்றுள்ளோம். நீதிமன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நான் நீதிமன்றில் தடை உத்தரவு ஒன்றையும் பெற்றுள்ளேன்.

நான் வகிக்கும் தவிசாளர் பதவி மற்றும் களனி ஆசன அமைப்பாளர் பதவியிலிருந்து என்னை நீக்க முடியாது என்று தடை பெற்றுள்ளேன். இந்தத் தடை உத்தரவு இருக்கும் வரையில் - தற்போது ஜூலை மாதம் 27ஆம் திகதி வரையில் உள்ளது. இதற்கு மேலும் தேவை ஏற்படும் போது அதனை நீடித்துக் கொள்ள முடியும் என நான் நம்புகிறேன்.

எனவே, மற்றவர்களின் விருப்பத்துக்கு - எண்ணத்துக்கு ஏற்ப என்னை பதவியிலிருந்து நீக்க முடியாது. அவ்வாறு ஒரு தீர்மானத்தை யாரேனும் எடுத்தால் - அவ்வாறான கூற்றை யாரேனும் தெரிவித்தால் அது நிச்சயமாக நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடும்.

உண்மை என்னவென்றால் நான் இன்னும் பதவிகளில் இருக்கின்றேன். இன்னும் கட்சியில் இருக்கின்றேன். கொள்கை ரீதியாக நான் கட்சியினுள் மனஸ்தாபத்தில் உள்ளேன். ஏனெனில், நாங்கள் புதிதாக ஒரு கட்சியை உருவாக்கும் போது ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி 92 பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர்.



புதிய அரசியல் கலாசாரம் - ஊழலுக்கு எதிர்ப்பு - ஊழலில் ஈடுபடுபவர்களிடமிருந்து விலகி மக்களுடன் செல்லும் அரசியல் பயணம். அப்படி நினைத்துத்தான் கட்சியில் நாங்கள் இணைந்தோம். ஆனால், எதிர்ப்பார்த்த மாற்றம் அங்கு ஏற்படவில்லை. இதனால் நான் ஏமாற்றமடைந்துள்ளேன். அந்த விரக்தியிலேயே எனது கருத்தை வெளிப்படுத்துகிறேன்."

- என்றும் கூறினார். (ஐ)

# லொறி - வான் மோதிய விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, ஜூலை 16


லொறியும் வானும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

மாத்தளை, தம்புள்ளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

லொறியின் சாரதி உறங்கியதால் எதிரே வந்த வானுடன் மோதுண்டு இந்த விபத்து இடம்பெற்றது. இதில், வானில் பயணித்த பலர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

திருமண நிகழ்வு ஒன்றுக்காக சென்றவர்களே இந்த விபத்தில் காயங்களுக்கு உள்ளாகினர். இவர்கள் அனைவரும் குருநாகல் பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிய வருகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 16 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆனி 32
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : தசமி




**மேடம்**
ர்ாசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டிய நாள்.

**இடபம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். சக ஊழியர் களை அனுசரித்துப் போங்கள். மேலதிகாரிகளிடம் நெருக்கம் உண்டாகும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மிதுனம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். சிந்தனைத் திறன் பெருகும் நாள்.

**கடகம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி உங்களுக்கு உதவுவார். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி குறை கூறுவார். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**துலாம்**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**விருட்சிகம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உங்களை நம்பி மூத்த அதிகாரிசில பொறுப்புகளை ஒப்படைப்பார்.

**தனுசு**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். திருப்திகர மான சூழ்நிலை உருவாகும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மகரம்**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் உதவுவார்கள். அமைதி நிலவும்.

**கும்பம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். அரசால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**மீனம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையை பெறுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

# தமிழக மாணவர்களின் கல்விக்கு எந்த தடை வந்தாலும் தகர்ப்போம்

## முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டம்

சென்னை, ஜூலை 16

தமிழக மாணவர்கள் கல்வி கற்க எந்தத் தடை வந்தாலும் தகர்ப்போம் என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.

கல்வி வளர்ச்சி நாளான நேற்று தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு உதவி பெறும் ஆரம்பப் பாடசாலைகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை முதல்வர் ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில், தமிழ்நாட்டு மாணவர்கள் கல்வி கற்பதற்கு எதுவும் தடையாக இருக்கக் கூடாது. அது பசியாக இருந்தாலும் சரி நீட் பரீட்சையாக இருந்தாலும் சரி. அந்தத் தடைகளை நாங்கள் உடைக்கிறோம். முன்பு



நாம் நீட் பரீட்சையை எதிர்த்த போது ஏன் எதிர்க்கிறீர்கள் என்று நம்மை கேள்வி கேட்டனர். இன்று ஒட்டுமொத்த நாடும் நீட் பரீட்சையை தமிழகத்தின் வழியில் எதிர்க்கிறது. பல தலைவர்கள், மாணவர்கள் அமைப்பினர் தற்போது நீட் பரீட்சையை எதிர்க்கின்றனர். ஏன் உச்ச நீதிமன்றமே நீட் பரீட்சை பற்றி கேள்வி கேட்கிறது- என்றார். (எ)

# கொலையையும் தடுக்க முடியவில்லை சரணடைந்தவரையும் காப்பற்றவில்லை

## வெட்கக்கேடானது என்று சீமான் சாடல்

சென்னை, ஜூலை 16

ஆம்ஸ்ட்ராங் படுகொலையைத்தான் தடுக்க முடியவில்லை. சரணடைந்த கைதியையும் காப்பற்ற முடியவில்லை என்பது வெட்கக்கேடானது என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட விசாரணைக் கைதி திருவேங்கடம், பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. இந்தக் கொலை வழக்கில் சரணடைந்தவர்கள் குற்றவாளிகள் அல்ல என்ற சந்தேகம் தற்போது திருவேங்கடம் கொல்லப்பட்டிருப்பதன் மூலம் அதிக மாகிறது என்றும் சீமான் கூறினார். (எ)

# "சீரழியும் அரச பாடசாலைகளை மேம்படுத்த உறுதியேற்போம்"

சென்னை, ஜூலை 16

தமிழ்நாட்டில் சீரழிந்து வரும் அரச பாடசாலைகளை மேம்படுத்த காமராசரின் 122 ஆவது பிறந்த நாளில் உறுதியேற்போம் என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் என்று போற்றப்பட்ட கர்மவீரர் காமராசரின் 122ஆம் பிறந்த நாள் நேற்றாகும். தமிழ்நாடு கல்வியில் சிறந்து விளங்குவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பெருமகனார் அவர் தான் என்றும் தனது எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கத்தில் அன்புமணி குறிப்பிட்டுள்ளார். (எ)

# விவசாயிகள் மீது தி. மு. க. அரசுக்கு அக்கறையில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

வேலூர், ஜூலை 16

தமிழக விவசாயிகள் மீது தி. மு. க. அரசுக்கு துளியளவும் அக்கறையில்லை- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் அ. தி. மு. க. பொதுச்செயலாளருமான பழனிச்சாமி குற்றஞ்சாட்டினார்.

கூட்டணிக் கட்சிகள்தான் தி. மு. கவுக்கு முக்கியம். அதனால் தான் காவிரி விவகாரத்தில் முதல்வர் மு. க. ஸ்டாலின் மௌனம் சாதிக்கிறார்.

முன்னதாக அவர் செய்தியாளர் களிடம் கூறியதாவது: பண பலம், அதிகார பலத்தால் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி. மு. க. வெற்றி பெற்றுள்ளது. காவிரிப் பிரச்னையில் உச்ச நீதிமன்றம் [illegible] தெளி



வான உத்தரவைப் பிறப்பித்துள்ளது என்றும் பழனிச்சாமி கூறினார்.

வேலூரில் நடந்த செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# சரணடைந்தவர் ஏன் தப்பிக்க வேண்டும்?

## அண்ணாமலை கேள்வி

சென்னை, ஜூலை 16

பொலிஸ் நிலையத்தில் வந்து சரணடைந்தவர்கள் ஏன் தப்பிக்க வேண்டும்? தலைமறைவான ஒருவரை சுற்றி வளைத்து சுட்டுக்கொன்றதைத்தான் இந்திய அளவில் இதுவரை பார்த்துள்ளோம். சரணடைந்த ஒருவரை சுட்டுக்கொல்வது இந்தியாவிலேயே இதுதான் முதல்முறையாக இருக்கும் என்று தமிழக பா. ஜ. க. தலைவர் அண்ணாமலை விமர்சித்துள்ளார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழக மாநில தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைது சரணடைந்த திருவேங்கடம் என்பவர் தப்பிச் சென்ற நிலையில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் தொடர்பிலேயே அண்ணாமலை மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டு கட்சியின் ஆதரவு ரணிலுக்கே!

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 16

**ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொதுஜன பெரமுன கட்சி ஆதரவு வழங்கும் என்று அக்கட்சி உறுப்பினரான அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.**



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டு கட்சி ஆதரவு வழங்கா விட்டால் தாங்கள் எந்த பக்கம் நிற்பீர்கள் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் தற்போது முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை தொடர்வதற்கு இடமளிக்கப்படவேண்டும். அவருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கட்சிக்குள்ளும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளேன்.

எனவே, இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் முடிவை கட்சி எடுக்கும். நிச்சயம் ஆதரவு வழங்கும் என உறுதியான நம்பிக்கை உள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாது. சிலர் தற்புகழுக்கு - தமது தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு நீதிமன்றத்தை நாடலாம். தேர்தல் நடப்பது உறுதி-என்றார். (அ)

# பாதாள குழு உறுப்பினர்கள் 800இற்கும் மேற்பட்டோர் நான்கு மாதங்களில் கைது!

## பொலிஸ் மா அதிபர் தகவல்

கொழும்பு, ஜூலை 16

சமூகத்திலிருந்து ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களை இல்லாதொழிக்கும் செயற்பாடுகள் மிகச் சிறந்த திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபர் தேஷ்பந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

கடந்த நான்கு மாதங்களில் 800 இற்கும் மேற்பட்ட பாதாள உலக உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் மக்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் பொலிஸார் மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கடந்த இரண்டரை மாதங்களில் எவ்வித அசம்பாவிதங்களும் இடம்பெறவில்லை எனவும், அண்மைய சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் செயற்பட்டு வருவதாகவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

தற்போது நான்கில் மூன்று பாதாள உலகக் குழுக்கள் கட்டுப்படுத்தப் பட்டுள்ளதாகவும், எஞ்சிய சிலர் தற்போது நிகழ்ச்சிகளை நடத்தி வருவதாகவும், நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி அவற்றைக் கட்டுப்படுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் வெளிநாடுகளில் உள்ள குற்றவாளிகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிஸ் மா அதிபர், இது தொடர்பில் பொதுமக்கள் ஒருபோதும் அச்சப்பட வேண்டாம் எனவும் கூறினார்.

தற்போதுள்ள நிலைமை படிப்படியாக மாற்றப்பட்டு வருவதாகவும், சில சம்பவங்கள் ஏற்பட்டாலும் அதனை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தலை ஒத்திவைப்பது எமது கட்சி கொள்கையல்ல

## கூறுகின்றார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூலை 16

தேர்தலை ஒத்திவைப்பது தமது கட்சியின் கொள்கையல்ல என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மரதகஹமுல்ல பகுதியில் இடம்பெற்ற திவுலப்பிட்டி தொகுதி கூட்டத்தின்போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

தேர்தலை ஒத்திவைக்க எவரேனும் முயற்சிப்பார்களாயின் அதனை எமது கட்சி முற்றிலும் எதிர்க்கும் எனவும் அவர் தெரிவித்தார். (அ)

# வெளியூரிலிருந்து திரும்பியதும் முன்னணி நிறுவனமொன்றின் தலைவர் கைதாவார்!

கொழும்பு, ஜூலை 16

பெண் வணிக ஆய்வாளர் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்த இலங்கையின் முன்னணி நிறுவனமொன்றின் தலைவர் கைது செய்யப்படுவார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வெளியூரிலிருந்து நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார் என கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு தொடர்பில் முன்னணி நிறுவனமொன்றின் தலைவரான சந்தேக நபருக்கு கோட்டை நீதவானால் பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால் சந்தேக நபர் இருக்கும் இடம் தொடர்பில் எந்த தகவலும் இல்லை எனவும், பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளமையினால் அவர் நாட்டுக்கு வருகை தந்தவுடன் கைது செய்யப்படுவார் எனவும் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மே மாதம் 7ஆம் திகதி கொள்ளுப்பிட்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் சந்தேக நபர் தன்னை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியதாக கொழும்பைச் சேர்ந்த 39 வயதுடைய பெண் ஒருவர் முறைப்பாடு செய்துள்ளார்.

சந்தேக நபர் வெளிநாட்டில் இருந்தபோது அவரின் வணிக ஆய்வாளராக குறித்த பெண் ஒரு மாத காலமாக இணையம் ஊடாக பணி புரிந்துள்ளார்.

இந்நிலையில், சந்தேக நபர் கடந்த மே மாதம் 6 ஆம் திகதி நாடு திரும்பிய நிலையில், அவர் குறித்த பெண்ணை 7 ஆம் திகதி சந்திக்க விரும்புவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, குறிப்பிட்ட இடத்தில் பெண்ணைச் சந்தித்த சந்தேக நபர் அவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண் கொள்ளுப்பிட்டி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்நிலையில், சம்பவம் நடந்த அன்றே சந்தேக நபர் நாட்டை விட்டு வெளியேறியதாகவும், இன்னும் நாடு திரும்பவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# வீதியில் ஆணின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 16

கட்டுகஸ்தோட்டை, மடவளை வீதியில், மகாவலி கங்கையின் நீராடும் பகுதிக்கு அருகில் ஆண் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

ஹந்தகல, ஹலோயா பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவரது சடலம் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# அரச வருமானம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 16

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களிலும் அரசாங்கத்தின் வருமானம் 43.3 வீதத்தால் அதிகரித்துள்ளது என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு குறிப்பிட்ட முதல் நான்கு மாதத்திலேயே வருவாய் அதிகரித்துள்ளது என, நிதி அமைச்சு வெளியிட்டுள்ள மத்திய ஆண்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வருமான வரி நடவடிக்கைகள் மற்றும் ஏற்றுமதியை அதிகரித்து வருவாயை அதிகரித்தல், இறக்குமதியை கட்டுப்படுத்தல் போன்ற வினைத்திறனான நிர்வாக செயற்பாடு மூலம் அரசாங்க வருமானத்தை அதிகப்படுத்தி, நாட்டை மீட்டு, முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வியாபாரியை வேட்பாளராக்குவது பிறிதொரு விளைவின் ஆரம்பமே!

## அமைச்சர் சுசில் பிரேமஜயந்த சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

எவருக்கும் பயமில்லை, கடனில்லை என்று அரசியல் மேடைகளில் குறிப்பிடுபவர்கள் 2022 ஆம் ஆண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கூட செல்ல முடியாமல் நாட்டை விட்டு தப்பிச் சென்றதை மறந்து விட்டார்கள். தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட வியாபாரியை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க முயற்சிப்பது பிறிதொரு விளைவுக்கான ஆரம்பமாகும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பதுளை நகரில் இடம்பெற்ற புதிய கூட்டணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தவறான அரசியல் தீர்மானங்களினால் பலவீனமடைந்திருந்த சுதந்திரக் கட்சி மீண்டும் உயிர் பெற்றுள்ளது.பாரம்பரியமான சுதந்திரக் கட்சியின் மீது பெரும்பாலான மக்கள் இன்றும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். ஆகவே இந்த புதிய கூட்டணியின் இரண்டாவது மாநாட்டின் ஊடாக சகல சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன். அனைவரும் புதிய கூட்டணியில் ஒன்றிணைய வேண்டும்.

அரசியல் நெருக்கடிகளினால் நாட்டில் மீண்டும் உறுதியற்ற அரசாங்கம் தோற்றம் பெறக்கூடாது என்பதை கருத்திற் கொண்டு சிரேஷ்ட அரசியல்வாதிகளை உள்ளடக்கிய வகையில் பலமான அரசியல் கூட்டணியை உருவாக்கியுள்ளோம். இன்னும் இரண்டு வாரங்களில் கூட்டணியை பலப்படுத்தி ஜனாதிபதித் தேர்தல் குறித்து எமது தீர்மானத்தை அறிவிப்போம்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு மீண்டுள்ளது. ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு விடுக்கப்படவுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்கள் இடம்பெறுகின்றன. இதுவே ஜனநாயகம். இதனை வரவேற்கிறேன். ஆனால் 2022 ஆம் ஆண்டு இவ்வாறான ஜனநாயகம் காணப்படவில்லை.

அரசாங்கத்தை பொறுப்பேற்க தயார் என்று தற்போது குரல் எழுப்புபவர்கள் 2022 ஆம் ஆண்டு நாடு மிக மோசமான நெருக்கடியை எதிர்க்கொண்ட போது அரசாங்கத்தை பொறுப்பேற்கவில்லை. தனி மனிதனாக இருந்து ரணில் விக்கிரமசிங்க நாட்டையும் நாட்டு மக்களையும் பொறுப்பேற்றார். நெருக்கடியான சூழலில் நாங்கள் எமது எதிர்கால அரசியல் பற்றி சிந்திக்காமல் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினோம். எமது தீர்மானம் இன்று வெற்றி பெற்றுள்ளது.

எவருக்கும் கடனில்லை, பயமில்லை என்று நாட்டை கடனாளியாக்கியவர்கள் அரசியல் மேடைகளில் குறிப்பிடுகிறார்கள். இவர்கள் 2022 ஆம் ஆண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு கூடச் செல்ல முடியாமல் தலைமறைவாகி நாட்டை விட்டு தப்பி ஓடியதை மறந்து விட்டார்கள்.யார் அச்சமடைந்து தப்பிச் சென்றது,யார் நாட்டை கடனாளியாக்கியது என்பதை மக்கள் நன்கு அறிவார்கள்.

பலம்வாய்ந்த அரசியல் கட்சி என்று குறிப்பிட்டுக் கொள்பவர்கள் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க முடியாமல் திண்டாடுகிறார்கள். 2019 ஆம் ஆண்டு அரசியல் அனுபவமற்ற ஒருவரை ஜனாதிபதியாக்கியதால் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் தோற்றம் பெற்றன என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறான நிலையில் இந்த கட்சி மீண்டும் அதே தவறை செய்ய முயற்சிக்கிறது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார நெருக்கடியின்போது தக்கதருணத்தில் உதவிய இந்தியா!

## ரவூப் ஹக்கீம் பாராட்டு



கொழும்பு, ஜூலை 16

**இலங்கை சில வருடங்களுக்கு முன்னர் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டவேளை பெரும் நிதி உத வியை வழங்கியமைக்காக இலங்கை இந்தியாவிற்கு எப் போதும் நன்றிகடன்பட்டுள்ளது என முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இந்து நாளிதழிற்கு தெரிவித்துள் ளார்.**

திருச்சி விமான நிலையத்தில் வைத்து அவர் இதனைக் கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

ஈழ யுத்தத்தின் பின்னர் பொரு ளாதாரம் மீண்டும் முன்னேற் றப்பாதைக்கு திரும்பிய போதி லும் அதிகரித்த கடன்கள் கார ணமாகவும் வெளிநாடுகளிடமி ருந்து பெற்ற கடன்களை திருப்பி செலுத்த முடியாததாலும் இலங்கை சில வருடங்களிற்கு முன்னர் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது.

எரிபொருள் நெருக்கடி மக்க ளைபாதித்த நிலையில் இலங்கை மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட வேளையே இந்தியா பாரிய நிதி யுதவியை வழங்கியது.

இந்தியா தக்கதருணத்தில் வழங்கிய உதவிகள் ஆதரவு கார ணமாக இலங்கையால் இந்த நெருக்கயை கையாள முடிந்தது. இதற்காக இலங்கை என்றும் இந்தியாவிற்கு நன்றிக்கடன் பட்டதாக காணப்படும்.

இலங்கையில் காற்றாலை மின்உற்பத்தித் திட்டத்தினை முன்னெடுப்பதற்காக இந்தியா வுடன் இலங்கை உடன்படிக் கையில் கைச்சாத்திட்டுள்ளது.

இந்தியாவில் யார் அதிகாரத் திற்கு வந்துள்ளார் என்பதை விட ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ள தாக நான் கருதுகிறேன்.

இந்தியா மிகப்பெரிய நாடு, எந்த தேவையற்ற சம்பவங்க ளும் இன்றி நாட்டின் பல பகுதி களில் தேர்தல்கள் சுமுகமாக இடம்பெற்றுள்ளன. மோடி யின் கட்சி ஆட்சி அமைத்துள் ளபோதிலும் வலுவான எதிர்க் கட்சி. இது ஜனநாயகத்திற்கு சிறந்த விடயம்-என்றார். (அ)

# சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் ஆறு சிறுமிகள் தப்பிச் சென்றனர்

கொழும்பு, ஜூலை 16

மத்தேகொடை சிறுவர் பராமரிப்பு நிலையத்திலிருந்து 6 சிறுமிகள் தப்பிச் சென்றுள்ள தாக மத்தேகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

15 வயதுடைய மூன்று சிறு மிகளும் 16 வயதுடைய இரண்டு சிறுமிகளும் 18 வயதுடைய சிறுமியொருவருமே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸா ருக்கு கிடைத்த முறைப்பாட் டின் அடிப்படையில் மத்தே கொடை பொலிஸார் விசார ணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# போலி மருத்துவரை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

மருத்துவ சான்றிதழ் இன்றி இரு சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்தார் என்று கூறப்படும் போலி மருத்துவரை கைது செய்து உடனடியாக நீதிமன் றில் முற்படுத்துமாறு வெல்லம் பிட்டி பொலிஸாருக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஹர்ஷன கெக்குனுவெல நேற்று திங்கட் கிழமை உத்தரவிட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு அளித்தும் சந்தேக நபர் இதுவரை கைது செய்யப்பட வில்லை என பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தந்தை வழங்கிய வாக்குமூலத்தை பரிசீலித்த நீதி வான் இந்த உத்தரவை பிறப் பித்துள்ளார்.

வெல்லம்பிட்டியில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன் றில் மருத்துவர் இல்லாத சந்தர்ப் பத்தில் சிறுவர்களுக்கு சிகிச்சை அளித்த நபர் தொடர்பிலேயே இந்தக் கைது உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது. (ஐ)

# பொருளாதார சுதந்திரம் தொடர்ந்தும் பின்னடைவு

## சர்வதேச ஆய்வறிக்கை சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 16

இலங்கையின் பொருளாதா ரம் மீளெழுச்சி பெற்றுவருவ தாக கூறப்படுகின்ற போதிலும், பொருளாதார சுதந்திரத்தில் இலங்கை தொடர்ந்தும் பின்ன டைவை எதிர்கொள்வதாக சர் வதேச ஆய்வு அறிக்கைகள் சுட் டிக்காட்டுகின்றன.

இதன்படி, இலங்கையின் பொருளாதார சுதந்திர மதிப் பெண் 49.2 ஆக காணப்படு கின்ற நிலையில், பொருளாதார சுதந்திர சுட்டியில் 149 ஆவது இடத்தில் இலங்கை பட்டியலி டப்பட்டுள்ளது.

இந்த மதிப்பீடு கடந்த 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகை யில் 3 மதிப்பெண்களினால் குறைவடைந்துள்ளது. மேலும், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 39 நாடுகளில் இலங்கை 34 ஆவது இடத்தில் காணப்படு கின்றது.

இந்த நிலையில், பொருளா தார சுதந்திரத்தில் இலங்கை தொடர்ந்தும் பின்னடைவைச் சந்தித்து வருவது சர்வதேச ஆய்வு அறிக்கையின்படி தெளி வாக வெளிப்படுத்தப்பட்டுல் ளதாக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளாதாரம் மற் றும் புள்ளிவிவரவியல் திணைக் களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித் துள்ளார்.

அத்துடன், பொருளாதார சுதந்திரத்தை அமுல்படுத்தா விட்டால் பொருளாதார அபி விருத்தி இலக்குகளை நோக்கி நகர முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 2000 ஆம் ஆண்டு பொருளாதார சுதந்திரத்தில் 95 ஆவது இடத்தில் இருந்த இலங்கை, 2023 ஆம் ஆண்டு 149 ஆவது இடத்திற்கு வீழ்ச்சி யடைந்துள்ளமையினை ஆய்வ றிக்கை எடுத்துக்காட்டுவதாக வும் பேராசிரியர் வசந்த அத்துக் கோரள கூறினார். (அ)

# காலி கராப்பிட்டி வைத்தியசாலையில் இதய சிகிச்சை பட்டியல் 2028வரை நீள்வு!

## அவதிப்படும் நோயாளர்கள்

கொழும்பு, ஜூலை 16

காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் இருதய சத்திரசிகிச்சை மற்றும் தொராசி சத்திரசிகிச்சை பிரிவில் இருதய சிகிச்சை செய்ய வேண்டிய நோயாளர்களின் வரிசை 2028 வரையில் நீடிக்கப்பட்டுள்ள தாக குறித்த பிரிவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த பிரிவில் புதிதாக பதிவு செய்யப்பட்ட இதய நோயா ளிக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய 2028ஆம் ஆண்டு வரை காத்திருக்கவேண்டியுள்ளதாக இதய நோயாளிகள் தெரிவிக் கின்றன.

இங்கு பணிபுரியும் இதயம் மற்றும் தொராசி பிரிவுகளின் நிபுணத்துவம் பெற்ற அறுவை சிகிச்சை நிபுணர்களால் இதய அறுவைச் சிகிச்சைக்காக இந்த பிரிவில் பதிவு செய்யும் நோயா ளிக்கு 2028ஆம் ஆண்டு திகதி கள் வழங்கப்படுவதாக இருதய நோயாளிகள் சுட்டிக்காட்டு கின்றனர்.

இந்த பிரிவில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் இதயம் மற்றும் மார்பு குழி தொடர்பான சிறப்பு மருத்துவர் நாமல் கமகேயுடன் இணைந்து இதயம் மற்றும் தொராசி குழிக ளில் நிபுணத்துவம் பெற்ற மூன்று சத்திர சிகிச்சை நிபுணர் கள் பணியாற்றி வருகின்றனர்.

வைத்தியர் நாமல் கமகே ஒரு வாரத்துக்கு நான்கு இதய அறுவை சிகிச்சைகளை மேற் கொள்கிறார்.

கடந்த 2023ஆம் ஆண்டு நாமல் கமகேயால் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்ட இதய நோயாளிகளின் பட்டியல் சுமார் 1,500 ஆகும்.

எனினும், கடந்த ஆண்டில் வைத்தியர் நாமல் கமகேயால் சுமார் 400 இதய அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள் ளன.

இதயம் மற்றும் தொராசி குழிகளில் நிபுணத்துவம் பெற்ற வைத்தியர் நாமல் கமகே, தான் ஓய்வு பெறும்போது சுமார் 4,000 இதய நோயாளிகளின் பட்டியல் தன்னிடம் இருந்த தாக கூறுகிறார்.

அந்த நோயாளிகள் உயிரு டன் இருக்கிறார்களா? என்பது குறித்து ஆராயப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதயம் மற்றும் தொராசி குழி சிகிச்சைகளில் நிபுணத்து வம் பெற்ற அறுவை சிகிச்சை நிபுணரான வைத்தியர் ட்ரோ லுஷா ஹரிஷ்சந்திர இது தொடர் பில் கருத்து தெரிவித்திருந்தார்.

"இதய அறுவைச் சிகிச்சைக் காக இதய நோயாளியை 2028 வரை காத்திருக்கச் சொல்வது நடைமுறைக்கு மாறானது. இந்த காரணத்திற்காக, புதிதாக பதிவுசெய்யப்பட்ட நோயாளி களுக்கான கூடுதல் பட்டியலை நாங்கள் வைத்துள்ளோம்.

நான் ஒரு நாளைக்கு 2 இதய அறுவைச் சிகிச்சை செய்கிறேன். ஒரு இருதய அறுவைச் சிகிச்சை நிபுணரிடம் 8 இளநிலை மருத் துவர்கள் இருக்க வேண்டும்.

வைத்தியர்கள் பற்றாக்கு றையே இதைப் பெரிதும் பாதிக் கிறது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை டாக்டர்கள் இடமாற்றம் என்பது வேறு விடயம்.

அவர்களுக்கு பயிற்சி அளிக்க சுமார் 2 ஆண்டுகள் ஆகும்.

இதய அறுவைச் சிகிச்சை உச்சத்தில் இருக்கும்போது அவை மாறுகின்றன. பயிற்சி பெற்ற வைத்தியர்கள் இருந்தால், அதிக இதய அறுவைச் சிகிச்சை செய்யலாம்.

அது மட்டுமல்ல, இதய அறுவை சிகிச்சையின் தரமும் மிகவும் முக்கியமானது-என்றார். (அ)

# மீண்டும் தொடர் போராட்டம்!

## ரயில்நிலைய அதிபர்கள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 16

தமது கோரிக்கைகளை அமைச்சரவையில் சமர்ப்பித்து தீர்வுகளை வழங்குவதாக போக் குவரத்து அமைச்சர் வழங்கிய வாக்குறுதி இன்று நிறைவேற் றப்படாவிட்டால் மீண்டும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவுள்ளதாக ரயில் நிலைய அதிபர் சங்கம் எச்சரிக்கை விடுத் துள்ளது.

தமது சங்கம் இன்று கூடி இறுதித் தீர்மானத்தை எடுக்க வுள்ளதாக அந்த சங்கத்தின் தலைவர் சுமேத சோமரத்ன தெரிவித்தார்.

இதேவேளை, பல்கலைக்க ழகத்தின் கல்விசாரா ஊழியர்க ளின் நிறைவேற்று தர அதிகாரி கள் நேற்று முதல் பணிக்கு சமூ கமளித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் தொடர் பில் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங் கவுடன் இடம்பெற்ற கலந்து ரையாடலின் பின்னரே அவர் கள் இந்த தீர்மானத்தை எடுத் துள்ளனர். (அ)

# இரு பஸ்கள் மோதி விபத்து; 10இற்கு மேற்பட்டோர் காயம்

கொழும்பு, ஜூலை 16

தலங்கம - கொஸ்வத்த பிர தேசத்தில் இரண்டு தனியார் பேருந்துகள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 10 இற்கும் மேற் பட்டோர் காயமடைந்து வைத் தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக தலங்கம பொலி ஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய 177 இலக்க பஸ்ஸின் சாரதியும் அடங்குவ தாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலக்கம் 190 மீகொட - புறக்கோட்டை மற்றும் இலக் கம் 177 கடுவெல - கொள்ளுப் பிட்டி பயணிக்கும் பஸ்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகின.

மீகொடயிலிருந்து புறக் கோட்டை நோக்கிச் சென்ற பஸ் பத்தரமுல்லை தலாஹே னையை கடந்து பயணிக்கும் போது, கடுவெலயிலிருந்து கொள்ளுப்பிட்டி நோக்கிச் சென்ற பஸ் பின்னால் வந்து மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய சேவைகள் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்தவேண்டும்!

## அமைச்சர்கள் குழு ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 16

**மக்களைச் சிரமத்திற்கு உள்ளாக்குகின்ற தொழிற் சங்க தலைவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு கடந்த வாரம் அமைச்சர்கள் குழுவொன்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அத்தியாவசியச் சேவைகள் சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைய நாட்களாக இடம்பெற்ற திடீர் ரயில்வே பணிப்புறக்கணிப்பு காரணமாக பெருமளவான பயணிகள் எதிர்நோக்கும் சிரமங்களை கருத்திற்கொண்டு அமைச்சர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்களை ஒடுக்கும் தொழிற்சங்க தலைவர்கள் தொடர்பில் உரிய அமைச்சர்கள் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கடுமையாக சுட்டிக்காட்டினார்.

சில தொழிற்சங்க தலைவர்கள் சில அரசியல் நிகழ்ச்சி நிரல்களின் பேரில் எடுக்கப்படும் தீர்மானங்களினால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர குறிப்பிட்டார்.

தேர்தலின் போது பாதகமான சூழ்நிலை ஏற்பட்டாலும் மக்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தி, வேலை நிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் காஞ்சன விஜேசேகர மேலும் தெரிவித்தார்.

அத்துடன் மக்களை ஒடுக்கும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தனவும் வலியுறுத்தினார்.

(அ)

# பலத்த காற்றுடன் கடல் சீற்றம் வானிலை குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 16

நாட்டில் பலத்த காற்று மற்றும் கடல் சீற்றத்துடன் காணப்படும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக புத்தளம் வரையிலும் அம்பாந்தோட்டையிலிருந்து பொத்துவில் வரையான கடற்பரப்புகளிலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் வீசும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாக காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் திருகோணமலையில் இருந்து முல்லைத்தீவு ஊடாக காங்கேசன்துறை வரையிலும் புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக அம்பாந்தோட்டை வரையிலும் கடற்பரப்பை அண்மித்த கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 1 தொடக்கம் 20 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

அத்துடன் கடற்பரப்புகள் அவ்வப்போது கொந்தளிப்பாகக் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

கல்பிட்டியிலிருந்து கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் கடல் அலைகள் 2.0-2.5 மீற்றர் வரை உயரக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இது தொடர்பில் அவதானம் செலுத்துமாறு கடற்றொழில் மற்றும் கப்பற்துறையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ)



# மன்னார் கருங்கண்டல் பாடசாலையில் ஸ்மார்ட் வகுப்பறையை திறந்தார் சஜித்

மன்னார், ஜூலை 16

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் "பிரபஞ்சம்" நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கருங்கண்டல் பாடசாலைக்கான இலத்திரனியல் மூல வகுப்பறை கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதனின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது மடு கல்வி வலயத்திற்கு உட்பட்ட கருங்கண்டல் பாடசாலையில் அமைக்கப்பட்ட குறித்த இலத்திரனியல் மூல வகுப்பறை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் இணைந்து மடு வலயகல்வி பணிப்பாளர், கருங்கண்டல் பாடசாலை அதிபர், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பிரதிநிதி வசந்த் இணைந்து குறித்த ஸ்மார்ட் வகுப்பறைகளை வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

மேலும் குறித்த பாடசாலைகளின் நூலகங்களுக்கு தேவையான ஒரு தொகுதி ஆங்கில புத்தகங்கள் வழங்கி வைத்த தோடு,புதிய நூல்கள் கொள்வனவு செய்ய தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் சஜித் பிரேமதாசாவினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# காணி குறித்த பெருமளவு வழக்குகள் நிலுவையில்!

## அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன

கொழும்பு, ஜூலை 16

காணிப் பிரச்னை மக்களுக்கு பெரும் பிரச்னையாக உள்ளது எனவும் நாட்டில் காணப்படும் பெரும்பாலான நீதிமன்றங்களில் காணி தொடர்பான பல வழக்குகள் நிலுவையில் உள்ளன எனவும் அமைச்சர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிலம் தொடர்பான வழக்குகளை தீர்க்கப் பல ஆண்டுகளாக மக்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வருகின்றனர்.

இந்தப் பிரச்னைகளில் இருந்து மக்களை விடுவிப்பதற்காக உறுமய வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஆரம்பித்தார். இந்த பிரதேசத்தில் காணி அமைச்சர்களும் இருந்தனர்.



ஆனால் அவர்களால் மக்களின் காணிப் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை.

குறைந்த பட்சம் இந்த பிரதேசத்தில் இருக்கும் ஜே.வி.பி.யின் தலைவரால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியவில்லை. 1988-1989 இல் ஜே.வி.பி ஏற்படுத்திய அழிவு இந்த நாட்டை பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது.

இந்த ரஜரட்டை பிரதேசத்தில் இருந்துதான் நாட்டுக்கு அரிசி வழங்கப்படுகிறது. 2007ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மொரகஹகந்த திட்டத்தில் இருந்தும் ரஜரட்டைக்கு இது வரை தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே ரஜரட்டை பிரதேசத்துக்கு நீரைப் பெற்றுக்கொடுக்கும் அவசர வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு நான் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார்.

(அ)

# கிளப் வசந்த கொலைச் சம்பவத்துடன் பல்கலைக்கழக மாணவிக்கு தொடர்பா?

கொழும்பு, ஜூலை 16

"கிளப் வசந்த" என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்தவின் சடலம் வைக்கப்பட்டிருந்த பொரள்ளை மலர்ச்சாலைக்கு இரு தடவைகள் கொலை மிரட்டல் விடுவதற்காக பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் தொலைபேசி இலக்கம் பல்கலைக்கழக மாணவி ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பல்கலைக்கழக மாணவி மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் இவர் பொரளை பிரதேசத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்று வருவதாக தெரியவந்துள்ளது.

இந்த தொலைபேசி இலக்கம் அச்சுறுத்தல் நடவடிக்கைகளுக்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

தொலைபேசியில் அழைப்பு விடுத்தது யார் என்பது தொடர்பில் இதுவரை எந்த தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

(அ)

# இலங்கையில் தாயும் அவுஸ்திரேலியாவில் மகனும் ஒரே நாளில் உயிரிழந்த துயரம்!

கொழும்பு, ஜூலை 13

இலங்கையில் தாயும் அவுஸ்திரேலியாவில் மகனும் ஒரே நாளில் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

களனி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் லக்ஷ்மன் சுனில் விஜேசிறியின் மகன் அவுஸ்திரேலியாவில் பணிபுரியும்போது அகால மரணமடைந்துள்ளார்.

மகன் உயிரிழந்த தினத்திலேயே தாயாரும் இலங்கையில் உயிரிழந்துள்ளார்.

மகனின் இறுதிக் கிரியைகள் நேற்று மெல்போர்னில் நடைபெற்றன.

உயிரிழந்த தாயாரின் இறுதி கிரியைகள் நேற்று மாலை களனி, பிலப்பிட்டிய மயானத்தில் இடம்பெற்றன.

உயிரிழந்த மகனுக்கு 40 வயதாகின்ற நிலையில் தாயாருக்கு 68 வயதென தெரியவந்துள்ளது.

இதேவேளை, லக்ஷ்மன் சுனில் விஜேசிறி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பெத்தியகொட அமைப்பாளராக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ருமேனியா, போலந்துக்கு செல்லவுள்ளார் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 16

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று முதல் 19 ஆம் திகதி வரை ருமேனியா மற்றும் போலந்து ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயங்களின் போது, வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி பல முக்கிய அதிகாரிகளை சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, ருமேனியா தலைநகர் புக்கரெஸ்டில் புதிய இலங்கைத் தூதரகத்தை வெளிவிவகார அமைச்சர் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கவுள்ளார். அங்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை தனது தூதரகச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகனத்துடன் எரித்து வியாபாரி படுகொலை

## திருகோணமலை காட்டில் பயங்கரம்



திருகோணமலை, ஜூலை 16


**திருகோணமலை, மொரவெவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதியில் மரக்கறி வியாபாரி ஒருவர் வாகனத்துடன் எரித்து படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.**

உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலஸ்தோட்டம் பகுதியைச் சேர்ந்த மரக்கறி வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த 42 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு எரித்துப் படுகொலை செய்யப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது.

இவர் இறுதியாக மொரவெவ பகுதிக்கு வந்ததாக கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், இவர் பயணித்ததாக கூறப்படும் வாகனம் கடந்த 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 2. 45 மணியளவில் வில்கம் விகாரைப் பகுதியைக் கடந்து பயணித்ததை அப்பகுதியில் இருந்த சி. சி. ரிவி காட்சிகள் மூலம் கண்டறிந்தனர்.

அதன் பின்னர் குறித்த வாகனம் மொரவெவ பகுதிக்கு வராத நிலையில் இடைப்பட்ட காட்டுப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போதே பன்மதவாச்சி காட்டுப் பகுதியில் இவர் பயணித்ததாக கூறப்படும் வாகனத்துடன் எரிக்கப்பட்ட நிலையில் இவருடைய சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில் இவருடைய உறவினர்கள் உட்பட பலரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.(எ)



# கராத்தேயில் சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ்

மட்டக்களப்பு, ஜூலை 16

ஐ. எம். ஏ. கராத்தே சங்கத்தின் மட்டக்களப்பு ஒட்டமாவடி பிரதேசத்துக்கான தரப்படுத்தல் பரீட்சை மீராவோடை அல் - ஹிதாயா மகா வித்தியாலயத்தில் ஐ. எம். ஏ. சங்கத்தின் ஒட்டமாவடி பிரதேச தலைவர் ஏ. கே. நஷான் அஹமட் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தென் கிழக்குப் பல்கலைக் கழக உடற் கல்வித்துறை பொறுப்பாளர் முஹம்மது இக்பாலின் பங்குபற்றுதலுடன் தரப்படுத்தல் பரீட்சையில் விருந்தினர்களாக கலந்து கொண்ட பாடசாலையின் பிரதி அதிபர் ஜமீல் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட கராத்தே சம்மேளன செயலாளர் முர்சி தீன் ஆகியோர் மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினர். அத்துடன் சிலியட் விரிவுரையாளர் நௌஷாத், ஐ. எம். ஏ. கறுப்புப் பட்டி மாணவன் மிப்ராத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(எ)



# வருடாந்த ஆடிவேல் விழா

காரைதீவு, ஜூலை 16

அம்பாறை, காரைதீவு மாவடி சிறீ கந்தசுவாமி கோவில் வருடாந்த ஆடிவேல் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த 06 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்தத் திருவிழாவில் தினமும் பகல் இரவு திருவிழாவாக வசந்த மண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 22 ஆம் திகதி சமுத்திர தீர்த்தத்துடன் பெருந் திருவிழா நிறைவடையவுள்ளது.

# 2 மீனவர்களை 4 நாட்களாக காணவில்லை

அட்டாளைச்சேனை, ஜூலை 16

கடற்றொழிலுக்குச் சென்ற அட்டாளைச்சேனையைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த நான்கு நாட்களாக கரை திரும்பவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு காணாமல் போன இந்த இரண்டு மீனவர்களும் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் அட்டாளைச்சேனை கப்பலடி கடற்கரை பிரதேசத்திலிருந்து கடற்றொழிலுக்காக சென்றுள்ளனர். இவர்கள் மறுநாள் சனிக்கிழமை காலை வேளை கடற்பகுதியிலிருந்து கரைக்குத் திரும்பியிருக்க வேண்டும். ஆனால், மூன்று தினங்களாகியும் இது வரை இந்த மீனவர்கள் கரை சேராமையால் இவர்களைத் தேடும் பணி முன்னெடுக்கப் பட்டு வருகின்றது.

அட்டாளைச்சேனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரும் கடற்றொழிலை நீண்ட காலமாக மேற்கொண்டு வருபவர்கள் என உறவினர்கள் தெரிவித்தனர்.

சின்னப்பாலமுனை - 02 ஐச் சேர்ந்த ஐ. எல். இர்பான் என்னும் 40 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையும், அட்டாளைச்சேனை 06 ஆம் பிரிவைச் சேர்ந்த கே. ஆர். எம். நிஸ்பர் என்னும் 24 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான இளம் குடும்பஸ்தருமே இவ்வாறு காணாமல் போயுள்ள மீனவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

# கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் நான்கு போட்டிகளில் சம்பியனானது

சம்மாந்துறை, ஜூலை 16

அம்பாறை, சம்மாந்துறை வலய விளையாட்டுப் போட்டியின் பெருவிளையாட்டுப் போட்டிகளில் கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயம் சம்பியனானது.

நான்கு போட்டிகளில் சம்பியனும் ஒரு போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்று வெற்றி வாகை சூடியது.

பாடசாலை விளையாட்டு பயிற்றுவிப்பாளர் கே. எல். எம். ஸகி, அனைத்துப் போட்டிகளுக்குமான பயிற்சியை இரவு பகல் பாராமல் வழங்கியிருந்தார்.

சம்பியன் வெற்றிக் கிண்ணங்களை வலய விளையாட்டு விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேந்திரகுமார் வித்தியாலய அதிபர் எஸ். இளங்கோபனிடம் வழங்கி வைத்தார்.

16 வயதுக்குட்பட்ட மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் முதலிடத்தையும் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான போட்டியில் இரண்டாம் இடத்தையும் மற்றும் உதைபந்தாட்ட போட்டியில் 17 மற்றும் 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் முதலிடம் பெற்றது.

அத்தோடு மாகாண மட்ட போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மாகாண மட்ட போட்டிகளுக்கு மேசைப் பந்தாட்டம் 16 வயது ஆண், பெண் மற்றும் இருபது வயது ஆண் ரக்பி அணி என்பன மாகாண மட்ட போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.



# 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்களுக்கு சிகிச்சை

அம்பாறை, ஜூலை 16

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி கடந்த 11 நாட்களாக நடத்திய இலவச ஆயுர்வேத மருத்துவ முகாமில் 4,000 இற்கும் மேற்பட்டோருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்குத் தேவையான மருந்துகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பிரதி மாகாண ஆணையாளர் எம். ஏ. நபீல் தெரிவித்தார்.

கதிர்காம பாத யாத்திரிகர்களின் நலன்கருதி "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" எனும் தொனிப்பொருளில் உகந்தை மற்றும் குமண போன்ற இடங்களில் கடந்த முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை இந்த இலவச மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மருத்துவ முகாமில் நான்காயிரத்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று பயனடைந்ததுடன் அவர்களின் உடல் உபாதைகளை நீக்கக்கூடிய மருந்துகள் மற்றும் உடல் வலிகளைப் போக்கும் ஆயுர்வேத மருந்துகளும் வழங்கப்பட்டன. அதேவேளை, தொற்றா நோய் மற்றும் தொற்றும் நோய் தொடர்பான விழிப்புணர்வும் வழங்கப்பட்டன- என்றார்.

உகந்தை காட்டு வழிப் பாதையூடாக இம்முறை 36 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கதிர்காமத்துக்கு பாதயாத்திரை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# "கருத்து வேறுபாடு உண்டு நாங்கள் எதிரிகள் அல்லர்"

## ட்ரம்ப் மீதான துப்பாக்கி சூடு குறித்து பைடன்

வாஷிங்டன், ஜூலை 16

"எங்களுக்குள் கருத்து, கொள்கை வேறுபாடு உண்டு ஆனால் நாங்கள் எதிரிகள் அல்ல" என்று ட்ரம்ப் மீதான துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் 50 ஆயிரம் பேர் திரண்டிருந்த தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் ஜனாதிபதி ஜோ பைடன் இந்தச் சம்பவம் குறித்து நாட்டு மக்களுக்காக உரையாற்றியுள்ளார். பைடனின் இந்த உரை அரிதானதாகக் கருதப்படுகிறது.

அந்த உரையில் பைடன் கூறியவை வருமாறு, எனது சக அமெரிக்கர்களே! நம் அரசியல் களத்தில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க விரும்புகிறேன். எனக்கும் ட்ரம்புக்கும் கருத்து



வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், நாங்கள் எதிரிகள் இல்லை என்பதை உணர்த்த விரும்புகிறேன். நாம் அனைவரும் அமெரிக்கர்கள் என்றவகையில் ஒன்றுபட்டு நிற்பது அவசியம். தேர்தலை வாக்குகள் மூலமாகத் தான் எதிர்கொள்ள வேண்டுமே தவிர தோட்டாக்களால் அல்ல. அமெரிக்காவின் வரலாற்றை மாற்றும் உரிமை மக்களின் கைகளில் தான் இருக்க வேண்டுமே தவிர கொலையாளிகளின் கைகளில் இருக்கக் கூடாது.

தாக்குதலுக்குப் பின்னர் ட்ரம்ப் நலமாக இருக்கிறார் என்பதை அறிந்தேன். இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கல். அவரது குடும்பத்துக்கு எங்களது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட நபரின் இலக்கு என்னவென்பது இன்னும் தெரியவில்லை. குற்றத்தில் ஈடுபட்ட நபர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரைப் பற்றிய விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

அமெரிக்காவில் இதுபோன்ற வன்முறைகளுக்கு இடமில்லை. வன்முறை எப்போதும் எதற்கான விடையையும் பெற்றுத் தந்ததில்லை. இத்தகைய வன்முறைச் சம்பவங்களை நம் நாட்டில் அனுமதிக்கவே முடியாது. அமெரிக்கர்கள் எதிரெதிர் அரசியல் கருத்துகளைக் கொண்டவர்களை மதிக்க வேண்டும். நம் சமூகத்தைப் பிரிக்க அந்நிய சக்திகள் முயற்சிக்கலாம் அதற்கு நாம் இரையாகிவிடக்கூடாது- என்றார். (எ)

# நேபாளத்தின் பிரதமராக சர்மா ஒலி பதவியேற்றார்

காத்மண்டு, ஜூலை 16

நேபாளத்தின் பிரதமராக நான்காவது முறையாக கே. பி. சர்மா ஒலி பதவியேற்றார். நேபாளத்தின் மிகப் பெரிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரான கே. பி. சர்மா ஒலியை, நாட்டின் பிரதமராக ஜனாதிபதி ராம் சந்திர பட்டேல் நியமனம் செய்தார்.

நேபாளத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடந்த பாராளுமன்றத் தேர்தலில், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையை எந்தக் கட்சியும் பெறவில்லை. இதனையடுத்து, சி. பி. என். மாவோயிஸ்டு கட்சியின் தலைவர் புஷ்ப கமல் தஹல் என்கிற பிரசந்தா, முன்னாள் பிரதமர் கே. பி. சர்மா ஒலியின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட 4 கட்சிகளுடன் கூட்டணி அமைத்து 3 ஆவது முறையாக பிரதமராக பதவியேற்றார். இதன்பிறகு கூட்டணி அரசுக்கான ஆதரவை நேபாள கம்யூனிஸ்ட் கட்சி திரும்பப் பெற்றது. இதனையடுத்து, நேபாள காங்கிரஸுடன் கூட்டணி அமைத்து பிரதமர் பதவியில் பிரசந்தா நீடித்தார்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை, நேபாள பிரதிநிதிகள் சபையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் பிரதமர் பிரசந்தா தோல்வியடைந்தார்.

இதனையடுத்து, நேபாளத்தின் புதிய பிரதமராக கே.பி. சர்மா ஒலி நேற்று பதவியேற்றார். (எ)

# 43 பேருக்கு ஆயுள் தண்டனை

அபுதாபி, ஜூலை 16

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் பயங்கரவாத குற்றச்சாட்டுகள் தொடர்பான வழக்குகளில் 43 பேருக்கு ஆயுள் கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை செயல்பாட்டாளர்கள், அரசியல் மாற்றுக் கருத்தாளர்கள் 84 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது.

அதேவேளை, பயங்கரவாத அமைப்பு ஒன்றை ஸ்தாபித்தனர் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் 53 பேர் குற்றவாளிகளாக காணப்பட்டுள்ளனர் எனவும் அவர்களில் 43 பேருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தாகவும் அரச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)



# "நான் இறந்திருக்க வேண்டும் இங்கே நான் இருக்கக்கூடாது"

## டொனால்ட் ட்ரம்ப்

நியூயோர்க், ஜூலை 16

படுகொலை முயற்சியிலிருந்து உயிர் தப்பியமை குறித்து தனது மன உணர்வை பகிர்ந்து கொண்டுள்ள அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தான் இறந்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் போஸ்டிற்கு வழங்கியுள்ள பேட்டியில் டொனால்ட் ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் தனது முழங்கையில் ஏற்பட்டுள்ள பெரிய காயத்தை செய்தியாளருக்கு காண்பித்துள்ளதுடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தன்னை பாதுகாக்க முயன்ற வேளை இந்த காயம் ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார்.

வலது காதை சுற்றி தளர்வான பெரும் பன்டேஜ் உடன் ட்ரம்ப் காணப்பட்டார். அவரை படம் எடுக்க முடியாது என அவரது பணியாளர்கள் தெரிவித்தனர் என நியூயோர்க் போஸ்ட் தெரிவித்துள்ளது.

நான் இறந்திருக்க வேண்டும். நான் இங்கே இருக்கக் கூடாது என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னர் மீண்டும் எழுந்து தனது கையை உயர்த்தி முகத்தில் இரத்தக்காயத்துடன் போராடுவோம் என தான் கோசமிடுவதை காண்பிக்கும் படம் குறித்து கருத்து தெரிவித்துள்ள ட்ரம்ப், இது தாங்கள் பார்த்ததிலேயே மிகச் சிறந்த படம் என தெரிவிக்கின்றார்கள் என ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னரும் நான் தொடர்ந்து உரையாற்ற விரும்பினேன். ஆனால், இரகசிய சேவை பிரிவினர் நான் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் எனத் தெரிவித்தனர் எனவும் ட்ரம்ப் கூறினார். (எ)

# இஸ்ரேல் படையின் தாக்குதலில் பலஸ்தீனர்கள் 141 பேர் பலி!

## 400 பேர் படுகாயம்

காஸா, ஜூலை 16

இஸ்ரேல் படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களில் சிக்கி பலஸ்தீனத்தை சேர்ந்த சிறுவர்கள், பெண்கள் உட்பட பொதுமக்கள் 141 பேர் பலியாகினர். 400 பேர் படுகாயமடைந்த நிலையில் உயிருக்காகப் போராடி வருகின்றனர்.

ஹமாஸ் போராளிகளை முற்றாக ஒழிக்கும் நோக்கில் காஸாவை சுற்றி வளைத்துள்ள இஸ்ரேல் இராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதல்களில் பலஸ்தீன பொதுமக்களே கொன்று குவிக்கப்பட்டு வருகின்றனர் என்று காஸா சுகாதார அமைச்சு குற்றஞ்சாட்டியுள்ளது.



இஸ்ரேல் - காஸா இடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி முதல் நீடித்து வருகிறது. ஹமாஸ் போராளிகளை ஒழிப்பதற்காக காஸாவை இலக்கு வைத்து தாக்கி வரும் இஸ்ரேல், பொது மக்கள் குடியிருப்புகளின் மீதும் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் குடியிருப்புப் பகுதியில் நடந்த தாக்குதலில் 141 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 400 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களை சேர்த்து இதுவரை காஸா பகுதியில் பலியானவர்கள் எண்ணிக்கை 38 ஆயிரத்து 584 ஆக உயர்ந்தது. 88 ஆயிரத்து 800 பேர் காயமடைந்துள்ளனர். (எ)

# ட்ரம்ப்மீது துப்பாக்கிச் சூடு எவ். பி. ஐ. தீவிர விசாரணை

நியூயோர்க், ஜூலை 16

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் உள ரீதியாக பாதிக்கப்படாதவர் என அந்த நாட்டின் தேசிய புலனாய்வு அமைப்பான எவ். பி. ஐ. தெரிவித்துள்ளது.

துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டவர் உளரீதியான பாதிப்பிற்குள்ளானவர் என்பதற்கான அறிகுறிகள் எதுவுமில்லை எனத் தெரிவித்துள்ள எவ். பி. ஐ. அதிகாரியொருவர் அவரது நோக்கம் குறித்தே கவனம் செலுத்துகின்றோம் குறிப்பாக சமூக ஊடகங்களில் அவரது பதிவுகளை ஆராய்கின்றோம் எனக் கூறியுள்ளார்.

இதுவரை ஆபத்தான, அச்சுறுத்தலான விடயங்கள் எதனையும் காண முடியவில்லை. விசாரணைகள் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. அவரது கையடக்க தொலைபேசியை ஆராய்கின்றோம். அதனை எவ். பி. ஐயின் ஆய்வு கூடத்துக்கு அனுப்பியுள்ளோம்.

டொனால்ட் ட்ரம்ப் மீதான துப்பாக்கிப் பிரயோகத்துக்கு கொள்கை ரீதியான காரணங்கள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. அவர் தனித்து செயல்பட்டுள்ளார் போல தோன்றுவதாகவும் எவ். பி. ஐ. தெரிவித்துள்ளது.

அவருக்கு எப்படி துப்பாக்கி கிடைத்தது என விசாரணைகளை மேற்கொண்டவேளை அவர் தனது தந்தை கொள்வனவு செய்த துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளார் என்பது தெரியவந்துள்ளதாக எவ். பி. ஐ. அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவருடைய வாகனத்தில் சில வெடிபொருட்கள் காணப்பட்டன எனவும் எவ். பி. ஐ. அதிகாரிகள் கூறினர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் முன்னோக்கி செல்லும் சூழலை உருவாக்குவதே புரட்சி

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூலை 16

**"மக்களைக் கொல்வதோ வீடுகளை எரிப்பதோ உண்மையான புரட்சி கிடையாது. மாறாக நாட்டில் மக்கள் பெருமையுடன் முன்னோக்கிச் செல்லக்கூடிய சூழலை உருவாக்குவதே உண்மையான புரட்சி" என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**



"உறுமய" வேலைத்திட்டத்தின் ஊடாக இந்த நாட்டு மக்களால் அந்தப் பின்னணியை உருவாக்க முடிந் துள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, உண்மையான சோசலிச செயற்றிட்டத்தை மக்கள் மயப்படுத்தும் உறுமய செயற்றிட்டத்துடன் அரசியல் நோக்கமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டுமெனவும் தெரி வித்தார்.

தம்புத்தேகம மகாவலி விளையாட்டரங்கில் நடைபெற்ற உறுமய நிரந்தர காணி உறுதி வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மேலும்,

இன்று தம்புத்தேகம மிகவும் அபிவிருத்தியடைந்த நகரமாக மாறியுள்ளது. 1984ஆம் ஆண்டு நான் இந்த பிரதேசத்துக்கு வந்த போது எனது நண்பர் அனுரகுமார திஸநாயக்க தம்புத்தேகம மகா வித்தியாலயத்தில் கற்றார். அந்தக் கல்லூரியில் உயர்தரக் கல்வியை ஆரம்பிக்க நான் நடவடிக்கை எடுத்ததால் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, நாம் ஆரம்பித்த களனிப் பல்கலைக்கழகத்தில் கற்று அதிலிருந்து பட்டம் பெற்று இப்போது பாராளுமன்றத்தில் எங்களுடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

கல்வி வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது, ஜே.வி.பி. தரப்பில் இருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த கல்வி வெள்ளை அறிக்கையில் இருந்து உருவான அவர் இன்று ஜனாதிபதி வேட்பாளராக உருவெடுத்திருப்பதையிட்டு நான் பெருமையடைகிறேன். இது கல்வி முறையின் வெற்றியைக் காட்டுகிறது.

அநுர திஸாநாயக்கவும் நானும் பாராளுமன்றத்தில் இணைந்து செயல்படுகின்ற போதிலும் எமது அரசியல் வேறுபட்டது. சில நாட்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் அரசியலின் ஆட்டக்காரர் மகிந்த ராஜபக்ஷ என்று தெரிவித்தார். அது எனக்கு பிரச்னை இல்லை. அவர் ஒரு ராஜபக்ஷவாதி என்பதில் எனக்கு எந்தப் பிரச்னையும் கிடையாது. அரசில் பல ராஜபக்ஷவாதிகள் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவானவர்கள் பலர் உள்ளனர். ஏனைய கட்சிகளை சேர்ந்தவர்களும் உள்ளனர். நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும்.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஜனாதிபதி பதவிக் காலம் நிறைவடையும்போது அனுர பண்டாரநாயக்கவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த அவர் தயாரானார். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க தைரியமாக முன்வந்து மகிந்த ராஜ பக்ஷவுக்கு அந்த வாய்ப்பை வழங்குமாறு கூறினார். தேர்தலின் போது அவருக்கு ஆதரவாகப் பணியாற்றினார். இது எனக்கு ஒரு பிரச்னை இல்லை. இன்று அரசியல் நோக்கமின்றி அனைவரும் ஒன்றிணைந்திருக்கிறோம். அவர்கள் ராஜபக்ஷவாதிகளா அல்லது ஐக்கிய தேசி யக் கட்சி ஆதரவாளர்களா என்ற கேள்விக்கு இடமில்லை. வீழ்ந்த நாட்டை மீட்க அனை வரும் ஒன்று சேர்ந்துள்ளோம். இலங்கையை போன்று வீழ்ச்சி யில் இருந்து மீண்டு வேகமாக முன்னேறும் வேறு எந்த நாடும் கிடையாது என அமெரிக்கா அறிவித்துள்ளது. இதை ஏனைய நாடுகள் முன்னுதாரணமாகப் பின்பற்ற வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்த நாட்டின் அரசியல் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்தது. எந்த நாட்டிலாவது பிரதமர் பதவி வேண்டுமா என கையேந்தி சென்றதுண்டா? 3 நாட்களாக பிரதமரை தேடினார்கள். வேறு நாடுகளின் அரசியலில் அவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. எந்த நாட்டிலும், ஒரு ஆசனம் மாத்திரம் இருப்பவர் ஜனாதிபதியானதுண்டா? இந்த வீழ்ச்சியடைந்த அரசியல் முறைமையில் இருந்து இன்று நாம் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். - என்றார்.

(ஐ)

# தமிழ்ச் சங்கத்தின் ஆடிப்பிறப்பு விழாவும் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும்!

யாழ்ப்பாணம், ஜூலை 16

யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழாவும் நவாலியூர் சோமசுந்தரப் புலவர் நினைவரங்கமும் நாளை புதன்கிழமை காலை 11 மணிக்கு நவாலி மகாவித்தியாலயத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் கி. கிருஷ்ணானந்தா வாழ்த்துரையையும் ஜீவா. சஜீவன் தொடக்கவுரையையும் வழங்குவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்துறைப் பேராசிரியர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம் ஆடிப்பிறப்பும் நவாலியூர் சோமசுந்தரப் புலவரும் என்ற பொருளில் சிறப்புரை ஆற்றுவார். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.



[illegible] க. சோமசுந்தரப் புலவர்

# மொட்டு வேட்பாளர் தம்மிக்க பெரேராவே!

## உதயங்க வீரதுங்க உறுதி

கொழும்பு, ஜூலை 16

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக தம்மிக்க பெரேராவையும் பிரதமராக நாமல் ராஜபக்சவையும் நியமிப்பதற்கு ராஜபக்ஷ குடும்பத்தினர் இணங்கியுள்ளதாக ரஷ்யாவுக்கான முன்னாள் இலங்கைத் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேரா என்பது உறுதியாகியுள்ளதாக உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ராஜபக்ஷ குடும்பத்துக்குள் இதற்கான தீர்மானம் இறுதியாகியுள்ளது. அத்துடன், பிரதமர் வேட்பாளராக நாமல் ராஜபக்ஷவின் பெயர் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க என்பவர் பொதுஜன பெரமுனவின் எதிரி ஸ்தானத்தில் இருக்கும் ஒருவராவார். அவர் ஒருபோதும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்படமாட்டார். எதிர்வரும் தேர்தலிலும் அவர் போட்டியிடுவார் என்றும் கூறமுடியாது.

எனவே, பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தம்மிக்க பெரேராவே என்பது முழுமையாக தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் எந்த மாற்றமும் இல்லை-என்றார்.

(அ)

# 58 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ள மைத்திரி

கொழும்பு, ஜூலை 16

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் வழங்கப்படவிருந்த 100 மில்லியன் ரூபா நட்டஈட்டில் 58 மில்லியன் ரூபாவை செலுத்தியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர்நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

எஞ்சிய தொகையை செலுத்துவதற்கு 06 வருட கால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் தலைவர் நிலந்த ஜயவர்தன ஆகியோருக்கு தலா ரூ.75 மில்லியன் செலுத்த வேண்டும் எனவும், முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ரூ. 50 மில்லியன் செலுத்த வேண்டும் எனவும், தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் சிசிர மெண்டிஸ் 10 மில்லியன் ரூபாவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடாக செலுத்தப்பட வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பலாப்பழச் செய்கையை மேம்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 16

ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு பலா செய்கையை மேம்படுத்த விவசாய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

புதிய 7 வகையான பலா செய்கையை முன்னெடுக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், நாட்டில் பலாப்பழத்துக்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தாய்லாந்து இலவச வீஸா;

# தூதரக அதிகாரிகளுக்கு அறிவிப்பு கிடைத்தவுடன் நடைமுறைக்கு வரும்

கொழும்பு, ஜூலை 16

இலங்கை உட்பட 93 நாடுகளைச் சேர்ந்தவர்கள் இன்று 15 ஆம் திகதி முதல் தாய்லாந்துக்கு விசா இன்றி செல்ல முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தாய்லாந்து தூதரகம் இது தொடர்பாக இலங்கை அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பு வந்த பின்னரே இந்த திட்டம் நடைமுறைக்கு வரும் என தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இலங்கையர்களுக்கு தாய்லாந்துக்கு விஸா இலவசம் தொடர்பில் நேற்று முன் தினம் பாங்கொக்கிலிருந்து எந்த உறுதிப்படுத்தலையும் பெறவில்லை. எனவே, உத்தியோகபூர்வ அறிவிப்பு கிடைத்தவுடன் இலங்கை குடிவரவு மற்றும் விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படும். அப்போது, அந்த திட்டம் அமலுக்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள தாய்லாந்து தூதரகத்தின் இணையத்திலும் புதிய திட்டம் தொடர்பில் எவ்வித அறிவித்தலும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, இலங்கையர்கள் தாய்லாந்திற்கு விசா இன்றி பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டால் இதுவே முதல் முறையாகும்.

தாய்லாந்து குடிமக்கள், விசா இல்லாமல் இலங்கைக்கு வருவதற்கு ஏற்கெனவே இலங்கை அனுமதி வழங்கியுள்ளது.

விசா இன்றி செல்லும் இலங்கையர்கள் தாய்லாந்தில் 30 முதல் 60 நாட்கள் தங்கி இருக்க முடியும். எவ்வாறாயினும், அங்கு பயணம் செய்யும் இலங்கையர்களிடம் பணம், தங்குமிடம் மற்றும் திரும்புவதற்காக விமான பயண ரிக்கெட்டுகளுக்கான சான்றுகள் இருக்க வேண்டும்.

தாய்லாந்து விமான நிலையங்களில் குடிவரவு அதிகாரிகளின் அனுமதியுடன் அந்நாட்டிற்குள் உள்நுழைய முடியும்.

தாய்லாந்து நாட்டின் அமைச்சின் செய்தித் தொடர்பாளர் தைசரணகுல் தெரிவிக்கையில்-

இந்த புதிய திட்டம் சுற்றுலா பயணிகள் மற்றும் குறுகிய கால வணிக பயணிகளுக்கு பயனளிக்கும். வருகையின்போது விசாவிற்கு தகுதியான நாடுகளின் எண்ணிக்கை 31 ஆக அதிகரிக்கும்.

இந்த ஆண்டு தாய்லாந்துக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 35 சதவீதமாக அதிகரித்துள்ளது. அதன்படி, மொத்தம் 18.2 மில்லியன் சுற்றுலா பயணிகளின் வருகையினால் 24 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்டி தந்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் சீனா, மலேசியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் இருந்து அதிக சுற்றுலாஒ பயணிகள் வருகை தந்துள்ளனர்.

இதேவேளை, ஆண்டுதோறும் சுமார் 350,000 இலங்கையர்கள் தாய்லாந்துக்கு வருகை தருகிறார்கள்.-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்புறக்கணிப்பு...

ஊழியர்களுக்கும் ஒரு தடவை 10 ஆயிரம் ரூபாய் விசேட கொடுப்பனவு வழங்கப்படும்.

ஜனாதிபதி சமர்ப்பித்த இந்த அமைச்சரவை பத்திரத்துக்கு நேற்று திங்கட்கிழமை அங்கீகாரம் வழங்கியது. அத்துடன், பணிக்கு சமுகமளித்த அரச ஊழியர்களுக்கு பாராட்டுப் பத்திரம் வழங்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

## பரந்தன்...

பரந்தன் இரசாயன தொழிற்சாலை இருந்த பகுதியையும் பார்வையிட்டுள்ளார்.

பரந்தன் இரசாயன தொழிற்சாலைக்கு சொந்தமான 230 ஏக்கர் காணியை விசேட முதலீட்டு ஊக்குவிப்பு வலயமாக உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இராஜாங்க அமைச்சருடன் கிளிநொச்சி மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், அமைச்சின் அதிகாரிகள், கண்டாவளை பிரதேச செயலாளர் ரி. பிருந்தாகரன், கிராம சேவகர், கண்டாவளை பிரதேச செயலக காணி பிரிவு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர். (ஐ)

## 13ஆவது...

ஒரு தீர்வு வழங்குவதே எனது நோக்கமாக உள்ளது. முக்கியமாக, நாட்டின் சட்டப் புத்தகத்தில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமை யாக அமுல்படுத்துவேன்.

மேலும், மன்னார் மாவட்டத்தில் உள்ள மீனவர்களின் பிரச்னையை தீர்த்து அவர்களுக்கு நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுப்பேன். எமது கடல் வளங்கள் கொள்ளையிடப்படுவதை தடுக்கும் வகையில் நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொடுப்பேன். வடக்கு மக்களின் அரசியல் உரிமை, சமூக உரிமை, பொருளாதார உரிமை, மனித உரிமைகள் உட்பட அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் வகையில் செயல் திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளேன்.

இன, மத வேறுபாடுகளுக்கு அப்பால் ஒரு தாய் பிள்ளைகள் போல் எமது பிரச்னைகளுக்கு தீர்வு கண்டு - இந்த நாட்டை அடுத்த கட்டத்துக்கு கொண்டுசெல்லவுள்ளேன். இந்த நாடு வங்குரோத்து அடைந்த நிலையில் உள்ளது. அதற்கு நாங்கள் ஒரு தாய் பிள்ளைகள் போன்று தீர்வு பெற்றுக் கொள்வது அவசியம்.

மன்னார் மாவட்டத்தில் மட்டுமின்றி வடக்கு, கிழக்கில் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் அதிகமாக உள்ளன. இந்தக் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கான சிறந்த திட்டங்கள், இலங்கை முழுவதும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான சிறப்பு திட்டங்களை கொண்டு வரவிருக்கிறேன். நுண்கடன் திட்டம் ஊடாக பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக்கொடுக்கவேண்டியுள்ளது.

மேலும், வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அவர்களை மையப்படுத்தி நிரந்தர தீர்வு பெற்றுக் கொடுக்க எண்ணியுள்ளேன். மீனவர்களின் பிரச்னைக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க எண்ணியுள்ளதோடு அதனை வடக்கு - கிழக்கை மையப்படுத்தி தீர்வு பெற்றுத் தருவேன்.

மாகாண சபை முறைமையை வலுப்படுத்தி அதை நிச்சயமாக பாதுகாக்க நடவடிக்கைகளை முன்னெடுப்பேன். அத்தோடு, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய பல செயல் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். மறைந்த எனது தந்தையார் ரணசிங்க பிரேமதாஸ மாகாண சபையை இல்லாது ஒழிப்பதற்கு ஒருபோதும் முயற்சிக்கவில்லை. மாகாண சபை கட்டமைப்பை பாதுகாக்கவும் நான் முயற்சிகளை மேற்கொள்வேன் - என்றார். (அ- ஐ)

## நாட்டின்

உறுப்பினர் எஸ். பி. திஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஆட்சியின் போது நாடு வங்குரோத்து நிலையடைய வில்லை என்பதை அரசியலுக்கு அப்பாற் பட்ட வகையில் ஏற்றுக் கொள்ள வேண் டும். நெருக்கடியான சூழ்நிலையில் அரசாங்கத்தை பொறுப்பேற்று சவால்களை வெற்றி கொண்டுள்ளார்.

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான பொருளாதார தாக்கத்தை ஒரு தரப்பினர் அரசியல் நெருக்கடியாக மாற்றியமைத்தனர். ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக போதைப்பொருள் பாவனையாளர்கள் கூடாரமிட்டு தேசிய பாதுகாப்பையும் சட்டவாட்சியையும் கேள்விக்கு உள்ளாக்கினார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2022ஆம் ஆண்டு போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வராமல் இருந்திருந்தால் நாடு மிக மோசமான நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும். போராட்டக்காரர்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டு பயங்கரவாதிகளை போன்று செயல்பட்டவர்களை அடக்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனியார் வியாபாரிகளை கண்டு அச்சமடைய போவதில்லை.

ஜனாதிபதியின் சிறந்த திட்டங்களால் குறுகிய காலத்தில் நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுள்ளது. தற்போதைய முன்னேற்றங்களை தொடர வேண்டுமாயின் நாட்டின் எதிர் காலத்துக்காகவேனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெறவேண்டும் - என்றார். (ஐ)

## 22.5வீதம்...

புதிய கட்டணத் திருத்தத்தின்படி, முதல் 30 அலகுகளுக்கான 25 சதவீத கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஓர் அலகுக்கு அறவிடப்பட்ட கட்டணமான 8 ரூபாய் 6 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், நடைமுறை மாத கட்டணம் 150 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

31 முதல் 60 வரையான அலகுகளுக்கு ஓர் அலகுக்கான கட்டணம் 20 ரூபாயிலிருந்து 9 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன், நடைமுறை மாத கட்டணம் 300 ரூபாயிலிருந்து 250 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது.

0 முதல் 60 வரையான அலகுகளுக்கு ஓர் அலகுக்கான கட்டணம் 25 ரூபாயிலிருந்து 15 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. இது 55 சதவீத குறைப்பாகும்.

61 முதல் 90 வரையான அலகுகளுக்கு ஓர் அலகுக்கான கட்டணம் 30 ரூபாயிலிருந்து 18 ரூபாயாகக் குறைக்கப்பட்டதுடன், நடைமுறை மாதக் கட்டணமான 400 ரூபாயில் மாற்றமில்லை.

91 முதல் 120 வரையான அலகுகளுக்கு ஓர் அலகுக்கான கட்டணம் 50 ரூபாயிலிருந்து 30 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மாத கட்டணம் ஆயிரம் ரூபாயாகவே தொடரும்.

121 முதல் 180 வரையான அலகுகளுக்கு ஓர் அலகுக்கான கட்டணம் 50 ரூபாயிலிருந்து 42 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மாத கட்டணம் ஆயிரத்து 500 ரூபாயாகவே தொடரும்.

180 அலகுகளுக்கு மேல் ஓர் அலகுக்கான கட்டணம் 75 ரூபாயிலிருந்து 65 ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது. நடைமுறை மாத கட்டணம் 2 ஆயிரம் ரூபாயாக தொடரும்.

மதத் தலங்களுக்கான மின்சார கட்டணம் 30 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் மின் பாவனையாளர்கள் கோரினால் மின்சார கட்டண பற்றுச்சீட்டை வழங்க வேண்டும் என்றும் மின்சார சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஐ)

## சம்பிரதாய...

ஜனாதிபதி பணிமனையில் சட்டத்தரணிகளை சந்தித்து உரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"கடந்த இரண்டு வருடங்களில் இந்த நாட்டின் அரசியல் கலாசாரம் மாறிவிட்டது. நாட்டைப் பற்றி சிந்தித்து ஒரு குழு உருவானது. அவர்கள் சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி செயல்பட்டனர். எனவே, எந்தக் கட்சியையும் சாராதவர்களும் பல்வேறு கட்சிகளை சேர்ந்தவர்களும் இந்த இடத்தில் உள்ளனர்.

2022 மே 09ஆம் திகதி நடந்த சம்பவத்தைப் பற்றி நான் மீண்டும் குறிப்பிடத் தேவையில்லை. நாட்டு மக்கள் ஒடுக்கப்பட்டதால், போராட்டங்கள் வெடித்தன. இந்த பிரசாரங்களை சிலர் பயன்படுத்திக்கொள்ள முயன்றனர். இறுதியில் சம்பிரதாய கட்சிகளால் நாட்டின் தலைமைத்துவத்துக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது.

85 பில்லியன் டொலர் மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2048 ஆம் ஆண்டாகும்போது 350 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க வேண்டும். சரியாக செயல்பட்டால் அந்த இலக்கை அடையலாம். சிங்கப்பூர், வியட்நாம் போன்ற நாடுகள் ஒரே நிலையில் இருந்து செயல்பட்டதால் இன்று முன்னேறியுள்ளன. அரசியல் செய்யும் போது அடிப்படை ஸ்திரத்தன்மையை நிலை நாட்ட நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். ஆனால் நாட்டின் பொருளாதார கட்டமைப்பை முன்னோக்கி நகர்த்த வேண்டும். இன்று பலர் இந்தக் கட்டமைப்பை உடைக்க விரும்புகிறார்கள். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் கடந்த வாரமும் அதற்கு முன்னரும் நாம் எத்தனை வேலை நிறுத்தங்களை எதிர்கொண்டோம். இந்த ஆண்டு செப்ரெம்பர் அல்லது ஒக்ரோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருப்பதே இதற்குக் காரணம்.

வேலைநிறுத்தம் செய்ய வேண்டிய அவசியமில்லை. உங்களுக்கு ஒரு கட்சியைப் பிடிக்கவில்லை என்றால் மற்றொரு கட்சிக்கு வாக்களியுங்கள். ஆனால், இந்த பொருளாதார கட்டமைப்பை உடைக்கவே அவர்கள் முயன்றனர். இப்போது நாடு பெற்ற வெற்றியை உறுதி செய்து, நாட்டை புதிய பாதையில் கொண்டு செல்வதா அல்லது பழைய முறைப்படி தொடர்வதா என்பதை முடிவு செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## யாழ்ப்பாணத்தின்...

வட்டுக்கோட்டையில் சிவபூமி தேவார மடம் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இந்தியாவில் தமிழ்நாடு என்று பெயர் இருந்தும், அங்கே தமிழ் இவ்வாறு இருக்காதா என்று யோசிக்க வைக்கிறது. அந்தளவுக்கு யாழ்ப்பாணத்தில் தமிழும் சைவமும் தழைத்திருக்கின்றன.

சைவத்துக்கும் தமிழுக்கும் சேவை செய்ய கலாநிதி ஆறு. திருமுருகன் தமிழ்நாட்டுக்கு வருகை தரவேண்டும். சாதாரண தொண்டு செய்பவர்கள் விளம்பரங்களுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். விளம்பரத்துக்காகவே தொண்டு செய்கிறார்கள். ஆனால், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் தன்னலம் இல்லாது எவ்வளவோ திருப்பணிகளை செய்துவருகிறார். இத்தகைய பணிகள் மன்னர்கள் செய்யவேண்டிய பணி இவர் சாதாரணமாக செய்துவருகிறார். இது இறைவனின் அருள் இல்லாமல் செய்ய முடியாது. இறைவனின் அருள் அவருக்கு உள்ளது.

சைவமும் தமிழும் எல்லோரையும் வாழவைக்கும். அத்தகைய பணி செய்பவரை யாழ்ப்பாணம் பெற்றுள்ளது. இத்தகைய பணி தமிழகத்தில் இல்லையே. கால மாற்றத்தால் சுருங்கிப்போயுள்ளது. ஆறு. திருமுருகனின் பணி உலகில் பல இடங்களுக்கும் தேவையாக உள்ளது - என்றும் கூறினார்.

## தேர்தலை...

எனவே, அதனை சர்வசன வாக்கெடுப்புக்கு உட்படுத்தும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசமைப்புக்கு முரணானது", என்று தீர்ப்பு வழங்கக் கோரி சட்டத் தரணி அருண லக்சிறி உனவட்டுன இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் கொண்ட ஆயம் நேற்று திங்கட்கிழமை இந்த வழக்கு பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

பரிசீலனை முடிவில், மனுவை விசாரணையின்றி நீதியரசர்களின் ஆயம் தள்ளுபடி செய்தது. அத்துடன், மனுதாரர் ஏற்படுத்திய செலவினத்துக்காக 5 இலட்சம் ரூபாயை செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. இந்தத் தொகையை வழக்காளி எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற செயலாளர் நாயகம், சட்ட மாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொக்குத்...

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதை குழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணியின் 10ஆம் நாளான நேற்று பணிகள் நிறைவடைந்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட முல்லைத்தீவு சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தவை வருமாறு,

"இன்றுடன் (நேற்று) இந்த மனிதப் புதைகுழியிலிருந்த மனித எலும்புக் கூடுகள் அனைத்தும் மீட்கப்பட்டுள்ளன. 52 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், துப்பாக்கிச் சன்னம், திறப்பு கோர்வை என்பனவும் கண்டெடுக்கப்பட்டன. அகழ்வு பணிகள் நிறைவடைந்தாலும் அடுத்துவரும் நாட்களில் இந்த புதைகுழி தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் தொடரும்" - என்று கூறினார்.

நேற்றைய 10ஆம் நாள் அகழ்வு பணிகளும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் நடைபெற்றிருந்தன. மூன்றாம் கட்ட அகழ்வில் 12 எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டு மீட்கப்பட்டன. முன்னதாக இரு கட்டங்களாக முன்னெடுக்கப்பட்ட அகழ்வில் 40 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

முன்னதாக கடந்த ஆண்டு ஜூன் 29ஆம் தண்ணீர் குழாய் பொருத்துவதற்காக நிலத்தை வெட்டியபோது இந்த மனிதப் புதைகுழி அடையாளம் காணப்பட்டது. இதைத் தொடர்ந்து கடந்த ஜூலை 6ஆம் திகதி இது மனிதப் புதைகுழி என முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி முன்னிலையில் தோண்டப்பட்டு உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து கடந்த செப்ரெம்பர் 6ஆம் திகதி முதல் கட்ட அகழ்வு பணி ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பல்கலை. கல்விசாரா ஊழியர்களின் 75 நாள் பணிப்புறக்கணிப்பு நிறைவு


கொழும்பு, ஜூலை 16

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை நேற்று முதல் இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

பல்கலைக்கழக கல்வி சாரா ஊழியர் சங்கத்தினர் கடந்த 75 நாட்களாக இந்த பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் அமைச்சர் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## 10ஆவது நாளாக தொடரும் மனிதப் புதைகுழி அகழ்வு!



முல்லைத்தீவு, ஜூலை 16

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் பத்தாவது நாளாக நேற்று தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில், விசேட சட்ட வைத்திய நிபுணர் கனக சபாபதி வாசுதேவ தலைமையில், தொல்லியல் திணைக்கள பேராசிரியர் ராஜ் சோமதேவ குழுவினருடன், தடயவியல் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட தரப்பினரின் பங்குபற்றுதல்களுடன் பத்தாம் நாள் அகழ்வாய்வு நடவடிக்கை இடம்பெற்றது.

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியில் இதற்கு முன்னர் இடம்பெற்ற இரண்டுகட்ட அகழ்வாய்வுகளின் போது 40 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதுடன், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளில் இதுவரை 7 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளுடன் மொத்தம் 47 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கனடா வேலை ஆசை காட்டி இலட்சக்கணக்கில் மோசடி!

### இரண்டு பேர் கைது

கொழும்பு, ஜூலை 16

கனடாவில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தை மோசடி செய்த இருவரை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பொரளை பிரதேசத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்று கனடாவில் நிதித்துறையில் தொழில் வழங்குவதாக கூறி 10 இலட்சம் ரூபாவை பெற்றுக்கொண்ட போதிலும், வாக்குறுதியளித்தபடி வேலை வழங்கவில்லை என நபர் ஒருவர் பணியகத்திற்கு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

அதன்படி, சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் விசாரணை அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

குறித்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரம் இன்றி நடத்தப்பட்ட சட்டவிரோத வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இதன்படி, குறித்த நிறுவன உரிமையாளர் உட்பட மேலும் ஒருவரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.(அ)

# ஓகஸ்ட் 30ஆம் திகதிக்கு முன் மீதி நட்டஈட்டை செலுத்துங்கள்!

### இல்லையேல் செப். 20இற்குப்பின் வழக்கு மைத்திரிக்கு நீதிமன்றம் உத்தரவு

கொழும்பு, ஜூலை 16

**உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈட்டை செலுத்தி முடிக்க கால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்துக்கு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் மீதி பணத்தைச் செலுத்தி முடிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 மில்லியன் ரூபா நட்டஈட்டை செலுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் இதுவரை 58 மில்லியன் ரூபா மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீதி பணத்தைச் செலுத்தி முடிக்க 6 வருடகால அவகாசம் வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது சட்டத்தரணி மூலம் உயர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த கோரிக்கையை பரிசீலித்த உயர் நீதிமன்றம், மீதி பணத்தைச் செலுத்தி முடிக்க ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கியுள்ளது.

மேலும், குறித்த காலத்திற்குள் மீதிப் பணத்தைச் செலுத்தாவிட்டால், நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் உரிய நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என 7 பேர் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

## கட்டணத்தைக் குறைக்காத சாரதிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கம்!

கொழும்பு, ஜூலை 16

மேல் மாகாணத்தில் ஓட்டோ கட்டணத்தைக் குறைக்காத சாரதிகளுக்கு எதிராக முறைப்பாடு செய்வதற்கு தொலைபேசி இலக்கம் ஒன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான முறைப்பாடுகளை 076 045 0860 என்ற இலக்கத்துக்கு அழைத்துத் தெரிவிக்குமாறு, மேல் மாகாண வீதி பொது போக்குவரத்து அதிகார சபையின் முச்சக்கர வண்டிகள் பிரிவின் பிரதானி ஜீவந்த கீர்த்தி ரத்ன தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடுகின்ற ஓட்டோக்களின் பயணக் கட்டணங்கள், இரண்டாம் கிலோ மீற்றரிலிருந்து ஒரு கிலோமீற்றருக்கு 90 ரூபாவாகக் குறைக்கப்படுகிறது.

நேற்று நள்ளிரவுடன் புதிய கட்டணத் திருத்தம் அமுலாகும் என்றும் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒருமுறையும் இந்தக் கட்டணத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான சிகரெட்களுடன் இளைஞர் கைது

கொழும்பு, ஜூலை 16

30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்களுடன் இளைஞர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு, கொச்சிக்கடை பிரதேசத்தைச் சேர்ந்த 18 வயதுடைய இளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் அபுதாபியிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில், சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதியிலிருந்து 30 ஆயிரம் சிகரெட்கள் அடங்கிய பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ஐ)

## பூநகரி கடற்கரையில் ஒதுங்கிய ஆணின் சடலம்

கிளிநொச்சி, ஜூலை 16

பூநகரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை தெற்கு கடற்கரையில் ஆணொருவரின் சடலம் கரையொதுங்கியது.

குறித்த சடலம் யாருடையது என இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பூநகரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(அ)

## காலி சிறைச்சாலை கைதி மூளைக் காய்ச்சலால் பலி!

கொழும்பு, ஜூலை 16

காலி சிறைச்சாலையில் மூளைக்காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 26 வயது கைதியொருவர் உயிரிழந்துள்ளார்.

அத்துடன், மூளைக்காய்ச்சல் எனச் சந்தேகிக்கப்படும் என 3 கைதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சிறைச்சாலைகள் சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ரணசிங்க தெரிவித்தார்.

அவர்கள் தற்போது கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## மீசாலை இளைஞர் ஒருவர் கனடாவில் சுட்டுக்கொலை!

கொழும்பு, ஜூலை 16

கனடாவில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் மீசாலை பகுதியைச் சேர்ந்த செல்வசிங்கம் சுலக்ஷன் (வயது 28) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் .

தமிழ் இளைஞர் மீது இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் குறித்த இளைஞர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனடாவின் ரொறன்டோவில் இரு வர்த்தகக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவரின் தந்தை சில வருடங்களுக்கு முன்னர் கனடா சென்று தொழில் நடவடிக்கைகளை ஆரம்பித்தார். மகனும் கல்வியைத் தொடரும்போது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

வியாபார இடத்தில் ஏற்பட்ட பிரச்னை காரணமாக வர்த்தகர்கள் இரு தரப்பினராகப் பிரிந்து அவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை றொரான்ரோ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org